257
TANJORE BOOK'S MART
DEALERS IN OLD BOOKS ...
NEAR KAPALI TEMPLE ...

மன்றம்

...யன். எம். ஏ.

1-9-54 | இதழ் 9

புரட்சியில் சிக்கிய பாரிஸ்

அரண்மனையில் அமளி

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

சேதுப்பிள்ளை பட்ட பாடு

கம்பராமாயணம் ஆக்கநெறிக்கு ஆகும் நூலா—ஆகாத நூலா என்பது பற்றிய விவாதங்கள், தமிழ்நாடெங்கணும் தலைதூக்கி நிற்கும் நிலை, 1942—43—44-ம் ஆண்டுகளில் ஏற்பட்டது.

கம்பராமாயணம் பொன்னேபோல் போற்றப்பட்டுப், புவியுள்ள அளவும் காப்பாற்றப்படவேண்டிய நூலாகும் என்னும் கருத்துப்படத் தோழர்கள் ஆர். பி. சேதுப்பிள்ளை, பண்டித மணி கதிரேசச் செட்டியார், ச. சோமசுந்தர பாரதியார், டி. கே. சிதம்பரநாதனார் ஆகியோர் பேசிவந்தனர்.

கம்பராமாயணம் ஆரியமக்கள் தேவர்களெனவும், ராமன் முதலியோர் கடவுள்களாக வழிபடவேண்டியவர்களெனவும், அவர்களது செயலே சிறந்த செயலெனவும் தமிழர்களை எண்ணச் செய்ததோடல்லாமல், அதற்கு தூபதீப நைவேத்தியங்காட்டி வந்தனை வழிபாடு செய்தால் போகிற கதிக்கு நல்லகதி ஏற்படும் என்று நம்பச் செய்ததால், அதன் நோக்கத்தையும், விளைவையும் கண்டித்துப் பெரியார் இராமசாமியும், அறிஞர் அண்ணாவும் நாடெங்கும் எடுத்துரைத்து வந்தனர்.

கம்பராமாயணத்தைப்பற்றி அறிஞர் அண்ணா அவர்களுக்கு என்ன தெரியும், சிறந்த தமிழ்ப் புலவரோடு அவரை விவாதத்துக்கு விட்டால், அவர் உறுதியாகத் தோற்றுப்போய்விடுவார், அப்படித் தோற்றுப்போய்விட்டால் கம்பராமாயண எதிர்ப்புக் கிளர்ச்சி வீழ்ச்சியுற்றுப் போய்விடும் என்று கருதிக்கொண்டு சென்னைச் சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத்தினர் கம்பராமாயண விவாதக் கூட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்தனர். கூட்டம் 9-2-1943 செவ்வாயன்று மாலை 4-30 மணிக்குச் சென்னை சட்டக்கல்லூரி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளையோடு விவாதம் நடத்தும்படி அறிஞர் அண்ணா அழைக்கப்பட்டிருந்தார். விவாதக் கூட்டத்திற்குத் தலைமைவகிக்கும்படி இந்து அற நிலையப் பாதுகாப்புக் குழுத் தலைவர் தோழர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார்.

மண்டபம் முழுவதும் மாணவர்களும், பொதுமக்களும் ஏராளமாகக் குழுமியிருந்தனர். தலைவர் கூட்டத்தைத் துவக்கி முதலில் அறிஞர் அண்ணா அவர்களைப் பேசுவதற்கு அழைத்தார். அறிஞர் அண்ணா அவர்கள் கம்பனின் புலமைத்திறனைத் தாம் மறுக்கவில்லை, கம்பராமாயணத்தின் சொல்லாழம், பொருள் செறிவு, உவமை அழகு அணி அழகு ஆகியவற்றை தாம் வெறுக்கவில்லை என்றும், ஆனால் கம்பராமாயணத்தின் நோக்கத்தையும், விளைவையும் வன்மையாகத் தாம் எதிர்ப்பதாகவும் கூறி சுமார் 1½ மணிநேரம் பேசினார்கள்.

பிறகு பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் எழுந்து, அறிஞர் அண்ணாவின் ஆணித்தரமான வாதங்களுக்கு நேருக்கு நேர் விடையிறுக்கமாட்டாமல், பத்து நிமிடநேரம் ஏதோ சில பொருத்தமற்றவைகளைக் கூறி, மற்றோர் முறை இவ் விஷயமாக அண்ணா அவர்கள் அழைப்பின், காஞ்சிபுரம் சென்று இது குறித்துப் பேசுவேன் என்று சொல்லிவிட்டு அமர்ந்துவிட்டார். தலைவர் அவர்கள் முடிவுரையில் விவாதம் மேலான முறையில் இருந்ததற்காக மகிழ்வதாகக் கூறித், தாம் ஏதொன்றும் கூறுவதற்கில்லை என்று சொல்லித் தப்பித்துக்கொண்டார்.

அதற்குப் பிறகு காஞ்சிபுரம் வரத் தயாரா என்று "திராவிடநாடு" இதழ் மூலம் கேட்டும், தோழர் சேதுப்பிள்ளை அவர்கள் விட்டால் போதும் என்ற முறையில் வாய்திறவாமல் வாளாயிருந்துவிட்டார். முதல் விவாதத்தில் பட்டபாடு அவருக்குப் போதுமென்றாகிவிட்டதுபோலும்!

1-9-54 புதன்கிழமை

பட்டத்தின் பதட்டம்

திருவாங்கூர்—கொச்சியிலுள்ள தமிழகப் பகுதிகளில் அடக்குமுறைக் கோரத்தாண்டவமாடுகிறது.

மொழிவழியில் தமிழகத்துடன் இணைந்துவிட விரும்பும் மக்களின்மீது, ஆட்சிபீடத்திலுள்ள மந்திரிசபை அடக்குமுறையைத் தூவுகிறது. உரிமைப் போராட்டத்தைச் சட்டபலம்கொண்டும், ஆயுதபலம் கொண்டும் ஒழித்துவிட, அரசாங்கம் புனைந்துள்ளது. தமிழர்தம் உரிமை மறுக்கப்படுகிறது, குரல் அமுக்கப்படுகிறது, எதேச்சாதிகார வெறிகொண்ட அரசாங்கம் எப்பாடுபட்டேனும் தமிழர்தம் அறப்போரை—அவர்கள் அடைய விரும்பும் லட்சியத்தை அழித்துவிடக் கனவு காண்கிறது.

இதுவரை பதினொரு உயிர்கள் பலிகொள்ளப்பட்டுவிட்டன. ஆயிரக்கணக்கான அறப்போர் வீரர்கள் வெஞ்சிறையில் தள்ளப்பட்டுள்ளனர். காட்டாட்சிபோன்று, எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, அரசாங்கம் அறப்போர் வீரர்கள்மீது கொடுமையைப் பாய்ச்சுகிறது. சிறையிலுள்ள வீரர்கள் பலவிதமாகத் துன்புறுத்தப்படுகின்றனர். வெளியில் அவர்களுடைய குடும்பத்தினர் சொல்லொணாக் கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்றனர். அடக்குமுறைகளைத் தாங்கமுடியாமல், திருவாங்கூர்—கொச்சி தமிழகப்பகுதியிலுள்ள மக்கள் பலர் தமிழகத்துக்கு ஓடிவந்துவிடவேண்டிய நிலையில் உள்ளனர். பட்டம் தாணுப்பிள்ளை உரிமைக் கிளர்ச்சியை அடக்க அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளார், காட்டாட்சி கடுமையான முறையில் விளங்குகிறது. நாஞ்சில் பகுதி மக்களின் வாழ்வு நஞ்சாக்கப்படுகிறது.

ஏகாதிபத்திய வெறியர்கள், எதேச்சாதிகார மன்னர்கள், சர்வாதிகார திவான்கள் இவர்கள் செய்துவந்த தான்தோன்றித் தர்பாரையும் மிஞ்சும் விதத்தில் பட்டம் தாணுப்பிள்ளை ஆணவக்கோலத்துடன் கிளம்பியுள்ளார். ஜனநாயக உரிமைகளை ஒதுக்கித் தள்ளி, சட்டப் பாதுகாப்புகளைத் துச்சமாக மதித்து, தனது இராணுவ ஆட்சியை பட்டம் தொடக்கிவிட்டார். பதினொரு உயிர்களைப் பலிகொண்டு, ஆயிரக்கணக்கானவர்களைச் சிறையில் தள்ளி, ஊரெங்கும் தமிழ்ப்பகுதியெங்கும் அடக்குமுறை ஆட்சியை உண்டாக்கி பயங்கரத்தை நிலைபெறச் செய்துவிட்டு, இப்பொழுது அரசாங்க அறிக்கையில் சமாதானம்கூற முயலுகிறார். "அரசாங்கத்துக்கும் சமூகத்துக்கும் எதிராகக் குற்றம் செய்பவர்களைச் சும்மாவிட முடியாது. அமைதியைக் காக்கப் போலீஸ் தனது கடமையைச் செய்தது" இப்பொழுது பட்டம் தாணுப்பிள்ளை சொல்லுகிற இதே காரணத்தைத்தான் எதேச்சாதிகார முறையில் ஆண்ட ஒவ்வொருவரும் கையாண்டு வந்தனர். இந்திய விடுதலைப் போராட்டத்தை அடக்க முயன்ற வெள்ளை ஏகாதிபத்திய வாதிகள் "அரசாங்கத்துக்கும், சமூகத்துக்கும் எதிராகக் குற்றம் செய்பவர்களைச் சும்மாவிட முடியாது" என்றுதான் கூறினார்கள். ஜாலியன்வாலாபாக்கில் மக்கள் கூட்டத்தைக் கொன்று குவித்த ஜெனரல் டையரும் "அமைதியைப் பாதுகாக்க எங்கள் கடமையைச் செய்தோம்" என்றுதான் சொன்னான். வரலாற்றில் அடக்குமுறையைத் தூவி, மக்களின் உரிமையைப் பறித்திடும் ஒவ்வொரு ஆணவ வெறியனும் இந்த "அமைதி பாதுகாப்பு" மந்திரத்தைத்தான் உச்சரித்திருக்கின்றனர்.

பாஸ்டிலியைக் கட்டிய லூயி மன்னர்கள், லண்டன் சிறைக்கோட்டையை உண்டாக்கிய ஆங்கில அரசுகள், சைபீரியா பனிக்காட்டைச் சிறைக்காடாக்கிய ஜார் பரம்பரையினர் இவர்களெல்லாம் "சமூகத்துக்கு" விரோதமான குற்றவாளிகளைத் தண்டிக்கத்தான் அந்தக் காரியங்களைச் செய்தனர்.

பெல்சன் போன்ற பயங்கரச் சிறைச்சாலைகளை உண்டாக்கிய இட்லரும், "அமைதியைக் காக்க" எடுக்கும் நடவடிக்கையாகத்தான் அதைக் கருதினான்.

பட்டம் தாணுப்பிள்ளையும் அந்த சர்வாதி

காரிகளைப்போல, "அமைதியைப் பாதுகாக்க" போலீஸ் பட்டாளம் ஏவினர். பலன், பதினொரு பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர், நூற்றுக்கணக்கில் காயப்படுத்தப்பட்டனர், ஆயிரக்கணக்கானவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டனர். அடக்குமுறை பலரை எல்லைக்கப்பால் விரட்டியடித்தது.

பட்டம் தாணுப்பிள்ளை விடுத்துள்ள அரசாங்க அறிக்கையில் மற்றொரு பகுதியும் இருக்கிறது. "போலீஸ் அடக்குமுறையிருப்பதாகப் பலர் அவதூறாகப் பிரசாரம் செய்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்தில் இருப்பவர்களை விட வெளியில் இருப்பவர்கள்தான் அதிகம் சொல்கிறார்கள்" போலீசாரின் அட்டகாசத்தைப் பற்றி எழுந்துள்ள கண்டனத்தை, பட்டம்தாணுப்பிள்ளையால் அலட்சியம் செய்ய முடியவில்லை. எனவே அதைப்பற்றி ஏதாவது அவர் சொல்லவேண்டியிருக்கிறது. அது ஒரு அவதூறான பிரசாரம் என்று சொல்லுகிறார். ஆனால் அடுத்த வாக்கியமே போலீசின் அடக்குமுறையின் அளவை வெளிப்படுத்திவிடுகிறது. போலீசாரின் அட்டகாசத்தைப் பற்றிய குற்றச்சாட்டு திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்துக்கு வெளியிலிருப்பவர்கள்தான் அதிகம் செய்வதாகப் பட்டம் தாணுப் பிள்ளை கூறுகிறார். இதற்கு என்ன அர்த்தம்? செய்கிற அடக்குமுறையை அங்கிருப்பவர்களால் கூறமுடியவில்லை, அடக்குமுறைக்குப் பயந்து அடங்கியிருக்கவேண்டியிருக்கிறது, அதனால் அந்தப் போலீசின் அதிகார எல்லைக்கு அப்பாலுள்ளவர்கள்தான் கூறவேண்டியிருக்கிறது. இதை முதன்மந்திரி பட்டம் தாணுப்பிள்ளைத் தன்னையறியாமலே ஒப்புக்கொள்ளுகிறார்.

அடக்குமுறைக் கோரத்தாண்டவமாடுகின்ற இடத்தில், "இம்" என்றால் சிறைக்கூடத்திற்கும், "ஏன்" என்றால் சுடுகாட்டுக்கும் அனுப்புகிற போலீஸ் ஆட்சியில், யார்தான் வெளிப்படையாக வந்து குற்றச்சாட்டுகளைக் கூறமுடியும்? அங்கிருப்பவர்கள் குறைகூறவில்லை, வெளியிலிருப்பவர்கள் குறைகூறுகிறார்கள் என்பது உண்மையில், அங்கிருப்பவர்கள் ஏதும் வெளியிடமுடியாதபடி அடக்கியாளப்படுகின்றனர் என்றுதான் பொருள்.

திருவாங்கூர்—கொச்சித் தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள எதேச்சாதிகாரப் போக்குக்கு—மக்களுரிமையை அழித்துவிட முயலும் அடக்குமுறை ஆட்சிக்கு, பட்டம் தாணுப்பிள்ளையின் அரசாங்கம் மட்டுமல்ல, அவருடைய ஆட்சியை பாதுகாத்துவரும் காங்கிரஸ் கட்சியினரும், எல்லாவற்றுக்குமேலாக எல்லைத் தகராறுகளைத் தீர்க்காமல், மொழிவழி மக்களிடைச் சண்டை சச்சரவுகளை மூட்டி வேடிக்கை பார்த்துவரும் நேரு பண்டிதரின் மத்திய சர்க்காரும் நமது கண்டனத்துக்கு உரியவராவார்கள். நாஞ்சில் பகுதி மக்கள் திட்டவட்டமாகத் தமது கோரிக்கைகளை மும்முறைத் தேர்தல் முடிவுகள் மூலம் தெரிவித்திருந்தும், டில்லி ஆட்சிபீடம் அலட்சியப் போக்குடன், திரு-கொச்சி தமிழ் மக்களை அவலநிலைக்குள்ளாக்கிவிட்டது.

அடக்குமுறையைத் தூவி, காட்டாட்சியை நிலைபெறச் செய்வதால், திருவாங்கூர்-கொச்சித் தமிழ்ப் பகுதிகளில் உள்ள பிரச்சினையைத் தீர்த்துவிடுவதாக முடியாது. இதை பட்டம் தாணுப் பிள்ளையின் மந்திரிசபையும், டில்லி மத்திய சர்க்காரும் நன்கு அறிந்திருக்கவேண்டும். எனவே அலங்கோலத்தை நீக்க, அமைதியை நிலைநாட்ட, தமிழர்களுக்குத் தரப்படும் தொல்லைகளை தவிர்த்து, அவர்களுக்குத் தரப்படவேண்டிய எல்லைக்கோட்டை நிர்ணயிக்க வேண்டும். காலங்கடத்துவதால், இரு மொழியினரிடையுள்ள நல்லுறவு நஞ்சாக்கப்படுவதுடன், இடைவிடாத சச்சரவுக்கும் வித்தூன்றியதாகிறது.

பட்டம் தாணுப்பிள்ளையின் பதட்டத்தால், நாஞ்சில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையை நேரில் கண்டறிந்து, உடனடியாக பாதுகாப்புத்தர, மத்திய அரசாங்கம் பாரபட்சமற்ற விசாரணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும். இதில் சென்னை அரசாங்கமும் ஆவன செய்யவேண்டும்.

தடையுத்தரவுகளை வீசுவதாலும், தடியடிகளைத் தருவதாலும், துப்பாக்கிகொண்டு சுடுவதாலும், மக்களின் உரிமைவேட்கையை அடக்கிவிடலாம் என்று பட்டம் நினைப்பாரானால், அது வெறும் பகற்கனவாகவேமுடியும். அவரது முயற்சி, மக்களுடைய உரிமையை அடக்காது. ஆனால் ஆட்சி பீடத்தை ஆட்டி, மந்திரிசபை கலைந்துபோகத்தான் உதவும்.

கருத்துக் கதிர்

ஆசிரியர் அண்ணா

"அருள் சீட்டுகள்"

ஏகாதிபத்திய அரசு இருந்தபொழுது எந்தெந்தக் காரியங்களை, காங்கிரஸ் கட்சி கடுமையாகக் கண்டித்துவந்ததோ, அவற்றையெல்லாம் காங்கிரஸ் கட்சி ஒவ்வொன்றாகச் செய்ய ஆரம்பித்திருக்கிறது, ஆட்சிபீடத்தில் அமர்ந்ததும்! வெள்ளைக்கார அரசாங்கத்தில் பட்டம் பெற்றவர்கள், அரசாங்க தாசர்கள், நாட்டின் நாசகாலத்துரோகிகள் என்று காங்கிரஸ் முழக்கமிட்டது, நேரு பண்டிதர் கர்ஜனை செய்தார். சுதந்தர இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சிமலர்ந்ததும், அதுவரை இருந்த பட்டங்களையெல்லாம் ஏற்றுக்கொள்ள மறுத்தது, அவற்றுக்கு மதிப்பெதுவும் இல்லாதுபோயிற்று.

ஆனால் காங்கிரஸ் மீண்டும் பட்டங்கள் கள் வழங்குவதை இன்று மேற்கொண்டுள்ளது. அண்மையில் சுதந்திரநாளன்று, பாரதரத்னம், பத்மவிபூஷன் போன்ற பட்டங்களை வழங்கியிருக்கிறது. பட்டங்கள் யாராருக்கு வழங்கப்பட்டுள்ளன, எவ்வாறு தகுதியானவர்கள் என்று பொறுக்கி யெடுக்கப்பட்டனர் என்ற கேள்விகளை நாம் எழுப்பவில்லை. முதலாவதாக "பட்டங்களே கூடாது அவை அவமானச் சின்னங்கள்" என்று பறைசாற்றிய கட்சி, பட்டங்களை வழங்குவதற்கு ஏன் முன்வந்திருக்கிறது? பட்டம் பதவி வேண்டியதில்லை, நாட்டுக்குச் செய்யும் சேவை, அதில் கிடைக்கும் பலன், இவற்றையே பட்டம் பதவியாக நினைத்துக்கொள்ளவேண்டும் என்று காந்தியார் வகுத்த நெறி, ஏன் அவருடைய பிரதம சீடராலேயே புறக்கணிக்கப்பட்டுவிட்டது?

ஏகாதிபத்திய அரசாங்கம் நம்பியதைப் போலவே, பட்டங்களையும் கௌரவங்களையும் தருவதால், தனக்கு வேண்டியவர்களை உண்டாக்கிக்கொள்வதுடன், பட்டத்திற்கு மயங்கும் பல "பெரிய" மனிதர்களையும் தன்பக்கம் சேர்த்துக்கொள்ளலாம் என்று மத்திய மந்திரிசபை—காங்கிரஸ் மேலிடம் கணக்கிடுகிறது. பட்டம் என்பது இனி அரசாங்கத்திற்கு வேண்டியவன் என்ற அடையாளச்சீட்டாகிவிடும்— "அருள் சீட்டு" ஆகிவிடும்.

பாதகாணிக்கைச் செலுத்தியவர்கள், தான் காட்டும் பக்திமார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் இவர்களுக்கு அருமறையானந்தர் அருள்சீட்டுகள் வழங்கினார். அதேபோல், அரசாங்கத்திற்கு அமோக ஆதரவு தருபவர்கள், அது காட்டும் வழி நிற்பவர்கள் இவர்களுக்கு அரசாங்கம் பட்டமென்ற "அருள்சீட்டு" வழங்குகிறது. பட்டம் பெற்றவர்களெல்லாம் அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டவர்கள் என்று கூறவில்லை. உண்மையில் உயர்ந்தவர்களாகவிருக்கும் ஒரு சிலர் அவ்வப்பொழுது பட்டம் பெறுபவர்களாக இருப்பார்கள். இது அவர்களுக்கு மதிப்புத்தரவல்ல, பட்டத்திற்கு மக்களிடம் மதிப்புப்பெற, நாளடைவில் 'பட்டம்' என்பது அரசாங்கத்தின் ஆதரவாளர்கள், ஆட்சிபீடத்திலிருப்பவர்களுக்குப் பக்கபலமாகவிருப்பவர்கள், அதிகாரத்திற்கு அந்தரங்க நண்பர்கள், இத்தகையோருக்கு வழங்கப்படுவதாக ஆகிவிடும்.

இவ்வாண்டு "கௌரவிக்கப்பட்டவர்களில்", திருமதி ஆஷா அரியநாயகம் என்பவர் தமக்கு வந்த பட்டத்தை ஏற்க மறுத்தது கண்டு நாம் மகிழ்வடைகிறோம். மற்றவர்களெல்லாம் காந்தியார் சமாதியைமட்டும் வணங்கிவிட்டு, காந்தியார் காட்டிய நல்லுரைகளை மறந்த நிலையில், அவர் ஒருவராவது "பட்டம்பதவி வேண்டாம்; பொதுநலப்பணி ஒன்றே போதும்" என்று ஒதுங்கிவிட்டது பாராட்டுதற்குரியதாகும்.

ஏகாதிபத்திய ஆட்சி பட்டம் பதவி என்ற பாசக்கயிற்றால் நாட்டில் பலரை தன்பக்கம் இழுத்துவைத்துக்கொண்டிருந்தது, அதே போல் காங்கிரஸ் ஆட்சி இன்று முயலுகிறது. ஏகாதிபத்திய முறையில் அது உருவாகிக்கொண்டு வருகிறகாரணத்தால்.

ஆட்சிபீடத்திலுள்ள "அருமறையானந்தர்கள்" அருள்சீட்டுகள் வழங்குகின்றனர். ஆனால் அருள்சீட்டு பெற்றவர்களை இந்தக்காலத்து "ஆண்டவர்களாகிய" மக்கள் அதற்காக ஏற்றுக்கொண்டுவிடமாட்டார்கள்.

> "அரசர் தம்மை உருப்போட்டு
> அருமறையாளன் அருள்சீட்டு
> ...."

ஃ ஃ ஃ

அண்ணாமலைக்கு........!

"அண்ணாமலைக்கு அரோகரா!" என்று ஆண்டிகள் கூவிவருவதை நாம் கேட்டிருக்கிறோம். வெண்ணீறணிந்து, வெண்கலமணியை ஒலித்துக்கொண்டு, அன்னக் காவடியை தோளிலே சுமந்து, மக்கள் உணவுமுன் உட்காரும் வேளைகளில், அவர்தம் இல்லங்களின்முன் இவர்கள் போய் நின்று, பிச்சை கேட்டிடும் ஆண்டிகளை நாம் பார்த்திருக்கிறோம். பஞ்சத்திற்கு ஆண்டியோ, பரம்பரையாக ஆண்டியோ, எப்படியாக இருந்தாலும், அன்னக்காவடியை வைத்துக்கொண்டு அண்ணாமலையாருக்கு அரோகரா போட்டால், காவடி நிறையும், அதனால் தனது வயிறும் நிறையும் என்ற நம்பிக்கையில் தான் ஆண்டிகள் அவ்வாறு செய்தனர்.

அந்த முறையில் ஆண்டிகளுக்கெல்லாம் அருள் தரும் அனுகரட்சகனாக அண்ணாமலையார் இருந்தார். ஆனால் இப்பொழுதோ, அந்த அண்ணாமலையாரே அன்னக்காவடி தூக்கிக் கொண்டு, மக்களிடம் தர்மம் கேட்கவேண்டிய நிலை வந்துவிட்டது.

அண்ணாமலை அருணாசலேஸ்வரருக்கு தினசரி பூசைகள் செய்யவே முடியாத நிலையில் அந்தக் கோயில் இருக்கிறதாம். எனவே நாளொன்றுக்கு ஒருவர் வீதம் ரூ 50 தந்து அன்றாட பூஜைகளை நடத்தித்தருமாறு "பெரிய" மனிதர்களை வேண்டிக்கொண்டுள்ளனர், அண்ணாமலைக் கோயில் தர்மகர்த்தாக்கள்.

"அண்ணாமலைக்கு அரோகரா!" என்று கூவிக் கேட்டால், ஆண்டிகளுக்குப் பிச்சை கிடைத்துக்கொண்டிருந்தது. அவர்களுக்குப் போட்டியாக, அண்ணாமலையாரே அன்னக்காவடியைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார். யார் பேரைச் சொல்லி 'அரோகரா!' போடமுடியும்!

"ஆறு ஆண்டுகள் மழையின்மையால், ஆலய வருமானம் மிகவும் குறைந்துவிட்டது" என தர்மகர்த்தாக்கள் முறையிட்டுள்ளனர்.

"தர்மம் குறைந்துவிட்டது. பாபிகளைத் தண்டிக்க மழை பெய்யவில்லை" என்று ஆச்சாரியார் போன்ற 'வான்நிலை ஆராய்ச்சியாளர்கள்' கூறுகிறார்கள். பாபிகளின் நிலங்களில் பயிர் வளராதிருக்க, அவர்களது வருமானத்தைக் குறைக்க. அதன்மூலம் அவர்களுக்குப் பக்தி உண்டாக்க, மழை பெய்யாமலிருக்கலாம். ஆனால் அண்ணாமலையார் என்ன பாபம் செய்தார், அவரது நிலத்தில் மழை பெய்யவில்லை, பயிர் வளரவில்லை, வருமானம் குறைந்துவிட்டது, நித்யகால பூஜைக்கு வழிதேடவேண்டிய நிலை வந்துவிட்டது!

ஒன்று, மழை பெய்யாமலிருப்பதற்கு ஆச்சாரியார் சொல்லுகிற காரணம் சரியானதல்ல.

அல்லது, அண்ணாமலையார் கோயிலுடைய சொத்துக்கள் உண்மையில் ஆண்டவனுடையதாக இல்லை. யாரோ அநியாயக்காரர்கள், பாபாத்மாக்கள் இவர்களுடைய வருமானத்துக்காக இருக்கிறது எனவேதான் மழை அந்த நிலங்களில் பெய்யவில்லை.

இதில் எது சரியானதென்று தெரிந்தால் நல்லது.

அட்டைப்பட விளக்கம் :

புரட்சியில் சிக்கிய பாரிஸ்

பாஸ்டில் சிறைச்சாலையின் வீழ்ச்சிக்குப் பின், வெர்செயில்ஸ் அரண்மனையில் வாழ்ந்து வந்த லூயி மன்னன் பாரிஸ் நகர எல்லைக்குள், நகரமக்கள் ஆதரவின்பேரிலேயே வாழவேண்டியவனுயின். தூலரிஸ் அரண்மனையில் தனது மனைவி மக்களுடன் "புதிய" வாழ்க்கையை ஆரம்பித்தான். மன்னனின் அதிகாரங்கள் ஒவ்வொன்றாகக் குறைக்கப்பட்டன; உரிமைகள் மறுக்கப்பட்டன. பயங்கர எதிர்காலம் வேகத்துடன் நெருங்கிவருவதை உணர்ந்த அரசி மேரி பிரான்சிலிருந்து தப்பிச்செல்ல திட்டம் வகுத்தாள். ஆனால் தப்பிச் செல்லுகையில் பிடிபட்டனர். பிரான்சுக்கெதிராக அந்நிய நாடுகளுடன் லூயி மன்னன் தொடர்புகொண்டுள்ளதாக மன்னனை எதிர்த்து மக்கள் எழுந்தனர்.

1792-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10-ம் நாள் எழுச்சிபெற்ற மக்கள் தூலரிஸ் அரண்மனையைத் தாக்கினர். அரண்மனைப் போர்வீரர்களுக்கும் மக்களுக்கும் கடும்போர்! மன்னன் சிறைப்படுத்தப்பட்டான்! மணிமுடி சாய்ந்தது! மக்கள் எழுச்சி கண்டு அயர்ந்துபோன அரசி மேரி, தனது மக்கள் இருவரையும் அணைத்து நடுங்கி நிற்கும் நிலையே படத்தில் காட்டப்பட்டுள்ளது ... டசாகும்.

அந்தத் தமிழ்ச் சுவடிகள்

பேச்சுவழக்கு அழிந்து ஒழிந்து, எழுத்து வழக்கு ஒன்றில் மட்டுமே உயிரை ஊசலாடவிட்டுக்கொண்டிருக்கும் வடமொழியை, இந்திய அரசியல் மொழியாக்கவும், இந்தியப் பொதுமொழியாக்கவும், கட்டாயப் பாடமொழியாக்கவும், உலக நாடுகளில் அதன் புகழைப் பரவவிடவும் வடமொழிப் பற்றுடையார் காட்டிவரும் ஆர்வத்தில், ஆயிரத்தில் ஒருபங்கு, தமிழ்மொழிப் பற்றுடையார், தமிழைப் பேணவும், வளர்க்கவும், பரப்பவும் காட்டிவருவார்களேயானல், தமிழ் எவ்வளவோ ஓங்குபுகழ் எய்திச் சிறந்து விளங்கும்.

மேனடு சென்று திரும்பும் வடமொழியாளர்களில், வடமொழியைப் பற்றி அங்கெல்லாம் பெருமைப்பட பேசிவராதவர் ஒருவர்கூட இருக்கமாட்டார். அவர்கள் வடமொழிப் புராண இதிகாசங்களைப் பற்றி, மேலைநாடுகள் ஒவ்வொன்றிலும் வானமளாவப் புகழ்கிருர்கள். மேலைநாட்டார் முன், வடமொழியும், வடமொழி இலக்கியங்களும் மட்டுமே ஓயாமல் வற்புறுத்தி வைக்கப்படுவதால், கீழை நாட்டில் வடமொழியும் அதிலுள்ள இலக்கியங்களும் மட்டுமே சீரியவை என்று அறியாமையின் காரணமாக ஏற்றுக்கொள்ளவேண்டிய இனறியமையாத நிலைக்கு அவர்கள் வந்துவிடவேண்டியவர்களாக இருக்கிருர்கள். கீழைநாட்டு மொழியிடத்துத் தமக்கு ஆர்வம் உண்டு என்பதையும், கீழை நாட்டு இலக்கியங்களிடத்துத் தமக்கு மதிப்பு உண்டு என்பதையும் காட்டிக்கொள்ள, மேலை நாட்டவரிற் சிலர், வடமொழிப் புராண இதிகாசங்களைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்க்கத் தொடங்கியிருக்கிருர்கள். அந்த நிலைமையைச் சுட்டிக்காட்டி "வடமொழியின் பெருமையைப் பாரீர்! அதனைப் போற்றி வளர்த்திட வாரீர்!" என்ற முறையில் வடமொழியாளர்கள் பறைசாற்றிவருகின்றனர்.

வடமொழியின் புகழ் பரப்பப்படுவதைப் பற்றி நாம் பொருமைகொள்ளவில்லை; ஆனல் அந்த அளவுக்குத் தமிழ்மொழியின் புகழ் பரப்பப்படவில்லை என்பது மட்டுமல்லாமல் தமிழின் புகழ் மறைக்கப்படுவதுகண்டு வருந்துகிருேம்.

தமிழ்ப்பெருங்குடிகளைச் சார்ந்தோர் எத்துணையோபேர்கள் மேலைநாடுகள் சுற்றி, ஆங்காங்கு சொற்பொழிவாற்றி வருகின்றனர். வடமொழியின் சிறப்பை எடுத்துக்கூறுவதிலே வடமொழியாளருக்கு இருக்கும் அக்கரை, தமிழின் சிறப்பைக் கூறவேண்டும் என்பதிலே தமிழ்மொழியாளர்க்கு இன்மை கண்டு நாம் இரங்கவேண்டியவர்களாக இருக்கிறேம்.

அக்குறையைச் சிறிதளவு போக்கும் வகையில், தமிழன்பர் ஒருவர் அண்மையில் நடந்து காட்டியிருப்பது, நம்மால் போற்றிப் பாராட்டப்படவேண்டிய தொன்றும். தமிழினிடத்துத் தணியா ஆர்வமும், நீங்காப் பற்றும் கொண்ட தோழர் டாக்டர் சேவியர் எஸ். தனிநாயகம் அவர்கள் அண்மையில் ஐரோப்பிய நாடுகளைச் சுற்றிப்பார்க்கச் சென்றிருந்த போது, தமிழின் பெருமையையும், சிறப்பையும் ஆங்காங்கு உணர்த்திவந்தது மட்டுமல்லாமல், ஆங்காங்குள்ள நூல்நிலையங்கள் சிலவற்றில் பழந்தமிழ்ச் சுவடிகளும், பழந்தமிழ்ப் புத்தகங்களும் எவ்வாறு வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகின்றன என்ற அரிய செய்தியைக் கண்டறிந்தும் வந்துள்ளார். அத்தகைய சுவடிகளையெல்லாம் கண்டறிந்து, அவற்றை நிரல்படுத்தி, அவைப்பற்றிய ஆராய்ச்சி நடத்தும் பெரும்பணியை இந்தியப் பல்கலைக்கழகங்களோ, இலங்கைப் பல்கலைக்கழகமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அரிய ஆவலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

சென்ற நானூறு ஆண்டு காலமாக தென்னடு வந்து திரும்பிய பார்வையாளர்களும், பாதிரிமார்களும், ஆராய்ச்சியாளர்களும், ஆசிரியன்மார்களும் எவ்வளவோ தமிழ்ச்சுவடிகளையும், தமிழ்ப் புத்தகங்களையும் கொண்டுசென்றுள்ளார்கள். நம்மவர்கள் வைத்துக் காப்பாற்ற மறந்த பல சுவடிகளையும், புத்தகங்களையும்

[redacted]

ஐரோப்பியர்களில் சிலர் வைத்துக் காப்பாற்றி வரக்கூடும் என்றாலும் நாம் வியப்படைவதற்கில்லை.

செயின்ட் பிரான்சிஸ் சேவியர் இந்தியாவுக்கு வந்த காலத்திலிருந்தே தமிழ் நூல்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல ஆரம்பித்தன என்று கொள்ளலாகும். பைபிளின் சில பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடுவதற்கான ஏற்பாடுகளை முதன் முதல் செயின்ட் பிரான்சிஸ் சேவியர் முயன்றார். பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துகேசியர் அச்சுப்பொறியை முதன் முதல் இந்தியா கொண்டுவந்து சேர்த்தனர். கி. பி. 1577—79 ஆண்டுகளுக்கிடையில்தான், முதல் தமிழ் அச்செழுத்துக்கள் செதுக்கப்பட்டன. செயின்ட் பிரான்சிஸ் சேவியரின் தமிழ் பைபிள்தான் முதன்முதல் அச்சியற்றப்பட்ட தமிழ் நூலாக இருக்கக்கூடும் என்று அறுதியிடப்பெறுகிறது. போர்த்துகேசு—தமிழ் அகராதி ஒன்று, போர்த்துகேசியர்களால், 1676-ம் ஆண்டு கொச்சியில் பதிப்பிக்கப்பட்டது. 1688-ல் இலங்கையில் புதிய விவலிய நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, டச்சுக்காரர்களால் அச்சியற்றப்பட்டது. இந்நூல் வெளிவந்தவுடன் மேற்குநாடுகளில் தமிழைப் பற்றிய செய்தியும், உணர்வும் நன்கு பரவிற்று என்னலாம். 1715-ல் தரங்கம்பாடியில் பைபிளின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் ஒன்று அச்சடிக்கப்பட்டது. அந்த ஆண்டிலேயே ஜெர்மன் நாட்டுப் பாதிரிமார் ஒருவர் தமிழ் இலக்கண நூல் ஒன்றை ஹல்லே என்ற இடத்தில் அச்சியற்றினார். ஐரோப்பாவில் தமிழ் கற்றுக்கொள்ள விரும்பினோர்க்கு அந்த இலக்கணப்புத்தகம் பெரிதும் பயன்படுவதாக இருந்தது. தாயுமானவர் பாடிய சைவப்பாடல்களும், பெஸ்கி மாமுனிவர் இயற்றிய தேம்பாவணி என்ற புத்தகமும் ஆரம்பநாட்களில் அச்சியற்றப்பட்ட தமிழ் இலக்கியங்களாகும். பெஸ்கி மாமுனிவர் தமிழ்-இலத்தீன், தமிழ்-பிரெஞ்சு, தமிழ்-போர்த்துகேசு ஆகிய அகராதிகளையும் 1732—1749 ஆண்டுகளுக்கிடையில் பதிப்பித்தார். முதன் முதல் பதிப்பிக்கப்பெற்ற தேம்பாவணியின் படி ஒன்று இலண்டனிலுள்ள இந்திய அலுவலக நூல்நிலையத்தில் இன்றும் வைத்துக் காப்பாற்றப்பட்டுவருகிறது. பெஸ்கி மாமுனிவர் தமிழ் இலக்கண நூல் ஒன்றும் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோளெங்கள்
வெற்றித்தோள்கள்!

கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள்
ஊறுமுள்ளம்
எங்கள் உள்ளம்!

வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்
கின்றதமிழ்
எங்கள் மூச்சாம்!

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

வால்டர், ஆண்டர்சன், ரீனியஸ், கிரால், போப், ஸிச்வார்ட்ஸ் போன்றவர்களால் பல்வேறு தமிழ் இலக்கண நூல்கள் வெளிக்கொண்டுவரப்பட்டன. தென்னாட்டில் புதுமுறைக் கல்வியைப் பரப்பியவர்களில் முக்கியமானவரான ஸிச்வார்ட்ஸ் தமிழ்-இலத்தீன் அகராதி ஒன்றையும் தொகுத்து வெளியிட்டார். ராட்லர், வின்ஸ்லோ ஆகிய இருவரும் தனித்தனியாகத் தமிழ் அகராதிகளை வெளியிட்டனர். 1855—62-ம் ஆண்டுகளுக்கிடையில் பாண்டிச்சேரியில் தமிழ்-பிரெஞ்சு அகராதி ஒன்று அச்சியற்றப்பட்டது.

பிஷப் கால்டுவெல் வெளியிட்ட "திராவிட மொழிகளின் ஒப்பியன் மொழிநூல்" இந்தியாவிலும், மேலைநாடுகளிலும் மிகவாகப் பாராட்டப்பெற்ற சீரிய நூலாகும். இவைபோன்று வெளியிடப்பெற்றனவும், வெளியிடப்பெறாதனமான பல்வேறு நூல்கள் மேலைநாட்டு நூல்நிலையங்களில் வைத்துக் காப்பாற்றப்பட்டுவரும் செய்தி உள்ளபடியே போற்றி மகிழ்வதற்குரியதாகும். இவைமட்டுமல்லாமல் பதிப்பிக்கப்பெறாத பல்வேறு பழந் தமிழ்ச் சுவடிகளும் அந்நூல்நிலையங்களில் இடம்பெற்றிருக்கின்றனவாம்.

டாக்டர் தனிநாயகம் அவர்களின் கூற்றிற்கொப்ப, அந்த அருந்தமிழ்ச் சுவடிகளைப்பற்றிய ஆராய்ச்சியினை நடத்த, இங்குள்ள பல்கலைக்கழகங்கள் முன்வந்தால், எதிர்காலத் தமிழ்த்துறை மாணவர்களுக்கு அது மிகவும் பயன்படுவதாக இருக்கும்.

விளைவும் விளக்கமும்

கவர்னர் சம்பளத்தைக் குறைக்கக் கிளர்ச்சி நடத்தவேண்டியது அவசியமா? அதுவும் சென்னை அரசாங்கத்திடம் நடத்துவது பொருந்துமா?

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள், கவர்னரின் கொள்ளைச் சம்பளத்தைக் குறைக்கவேண்டியது அவசியம் என்றும், அதற்காகச் சென்னை அரசாங்கத்தோடு போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படக் கூடும் என்றும், கிளர்ச்சியை எவ்வகையில் நடத்தலாம் என்பதுபற்றித் தாம் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பதாகவும் அண்மையில் ஒரு பொதுக் கூட்டத்தின் மூலமாக வெளியிட்டார்கள்.

சென்னை கவர்னர், சம்பளவகையில் ரூ. 56,000 மும், பல்வேறு விதமான படிகள் வகையில் ரூ. 9,37,000 மும், ஆகமொத்தம் ரூ. 9.93.000 ஒரு ஆண்டுக்காலத்திற்குப் பெறுகிறார். சென்னை அரசினைச் சேர்ந்த மக்களின் வரிப்பணத்தில் ரூ 9 93.000 ஒரு தனிப்பட்ட அதிகாரியான கவர்னருக்குப் போய்ச்சேருகிறது.

இன்றைய நிலையில் இந்தியப் பேரரசினையும், சென்னை அரசினையும் நடத்திச் செல்வது காங்கிரஸ் கட்சியாகும். காங்கிரஸின் வழிகாட்டியாகவும், ஒப்பற்ற ஒரு பெரும் தலைவராகவும் இருந்தவர்—இன்னமும் கொள்கை வடிவில் இருந்துவருபவர் காந்தியாராவார். அவர் ஒருபொழுது கூறினார், காங்கிரஸின் சுயராஜ்ய ஆட்சியில் திங்கள் ஒன்றுக்கு அதிகப்படிச் சம்பளம் ரூ 500 ஆகவும் குறைந்த அளவுச் சம்பளம் ரூ. 50 ஆகவுந்தானிருக்கும்; ரூ. 500-க்கு மேல் சம்பளம் வாங்கும் கவர்னரும் இருக்கமாட்டார், ரூ. 50-க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கும் தோட்டியும் இருக்கமாட்டான் என்னும் கருத்துப்பட. அதுமட்டுமல்லாமல் வெள்ளைக்காரன் நாட்டை ஆண்டுவந்த காலத்தில், அவன் ஆட்சியில் இருந்துவந்த கொள்ளைச் சம்பளத்தையும், அந்தஸ்து அதிகாரத்தின் பேரால் வெள்ளையர் ஆடம்பர வாழ்க்கை நடத்தியதையும் காங்கிரஸ் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்து வந்தார்கள். அதே காங்கிரஸ்காரர்களின் சுயராஜ்ய ஆட்சியில், அதே காந்தியாரின் சீடகோடிகளில் ஒருவர் கவர்னராக இருந்துகொண்டு மக்கள் வரிப்பணத்தில் ரூ. 9,93,000 பெறுகிறார் என்றால், அது காங்கிரஸ் தலைவர்களின் கொள்கைப்படிப் பார்த்தாலே அநீதியானது, அக்ரமமானது என்பது சாதாரண அறிவுபடைத்தவர்க்கும் புலனாகும். ஏழ்மையும், வறுமையும், பசியும், பட்டினியும், நோயும், வேலையில்லாத் திண்டாட்டமும் மக்களைப் பிய்த்துத் தின்னும் இந்த நாட்டில் 'கவர்னர்' என்ற ஒரு ஆடம்பரப் பதவி அவசியமில்லை என்பதை எவரும் உணர்வர்.

மாநில அரசுகளின் அதிகாரம், அந்தஸ்து, சட்டதிட்டம் ஆகியவற்றையும், கவர்னரின் பதவி, அந்தஸ்து அதிகாரம், ஒழுக்கமுறை ஆகியவற்றையும் வரையறுத்து, அடக்கி ஆண்டு, ஆதிக்கம் செலுத்தி வருவது மத்திய அரசாங்கமாகும். மத்திய அரசாங்கத்தின் ஆதிக்க அதிகாரப்பிடியிலிருந்து திராவிடத்தைத் தனியே பிரிக்கவேண்டுமென்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய குறிக்கோளாகும். ஒரு நாட்டின் சட்ட திட்டங்களை ஏற்படுத்துவதும் மக்கள் சக்திதான், அவைகளை மாற்றி அமைப்பதும் மக்கள் சக்திதான். உருவாக்கப்பட்ட ஒரு நாட்டின் சீரமைப்பிலே கவனம் செலுத்தும் மக்கள்சக்தி, சட்டமன்றங்களில் வீற்றிருந்து அமைதியானமுறையில், தேவையான அளவுக்குச் சட்ட திட்டங்களை மாற்றும். ஆனால் ஆதிக்கப்பிடியில் சிக்கிச் சீரழியும் ஒரு நாட்டை, விடுவிக்கும் பணியினை மேற்கொண்டுள்ள ஒரு விடுதலையியக்கம், கிளர்ச்சிகள், போராட்டங்கள் மூலமாகத்தான் சில அவசியமான சட்டதிட்டங்களையும், அரசியல் அமைப்பையும் மாற்றி அமைக்கவேண்டி நேரிடும். இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்ததுதான் திராவிட முன்னேற்றக்கழகத்தின் நிலை.

இன்றைய நிலையில், சென்னை கவர்னர், மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதன் ஒரு ஏஜண்டாக இருந்துவருகிறார். ஏற்கனவே லண்டன் எப்படி ஆர்தர் ஹோப், ஹென்றி நை போன்றவர்களைத் தன் ஏஜண்டுகளாக அனுப்பிவைத்துச் சென்னை மாநிலத்தில் ஆதிக்கம் செலுத்திற்றோ, அதுபோலவே டில்லி இப்பொழுது பவநகர் மன்னர், பிரகாசா போன்றவர்களைத் தன் ஏஜண்டுகளாக அனுப்பிவைத்து ஆதிக்கம் செலுத்துகிறது. கவர்னரை நியமிப்பது மத்திய அரசாங்கம், ஆனால் அவருக்காக ரூ. 9.93.000 ஒதுக்கித்தரவேண்டியது சென்னை அரசாங்கம்! அப்படிப்பட்ட கவர்னரை நியமிக்கும் அதிகாரம்படைத்த

மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தையே அடியோடு ஒழிக்கவேண்டுமானாலும், அல்லது அதற்கு முன் நடவடிக்கையாகக் கவர்னர் பதவியையே ஒழிக்கவேண்டுமானாலும், அல்லது அதற்கு முன் நடவடிக்கையாக கவர்னர் சம்பளத்தையே குறைக்கவேண்டுமானாலும் கிளர்ச்சிகள். போராட்டங்கள் நடத்துவதன்மூலம் தான் அவற்றை விரைவிலும். எளிதாகவும் செய்ய முடியும் என்பதற்கு உலக வரலாற்று ஏட்டுச் சுவடிகள் சான்றுகள் பகர்வதைக் காணலாம். சென்னை கவர்னரின் சம்பளத்தைக் குறைக்க. இப்பொழுதுள்ள நிலையில் கிளர்ச்சி செய்வதுதான் ஏற்ற வழியாகவும், அடிப்படை வழியாகவும் அமையும்; அந்த முறையால்தான் எண்ணிய செயலை எளிதாகவும், விரைவாகவும் செய்யமுடியும். கிளர்ச்சிதான் சென்னை அரசாங்கத்தையும், அதன் மூலம் இந்திய அரசாங்கத்தையும் சிந்திக்கவைக்கும். அந்த முறையன்றி வேறுவழியில் கவர்னரின் கொள்ளைச் சம்பளத்தைக் குறைப்பதற்கான நிலைமை அண்மையில் ஏற்படும் என்று எண்ணுவதற்கில்லை. எனவேதான் அறிஞர் அண்ணா அவர்கள் கிளர்ச்சி செய்தாவது கவர்னரின் கொள்ளைச் சம்பளத்தைக் குறைக்கவேண்டும் என்னும் கருத்துப்படக் கூறியுள்ளார்கள். அதற்காக முற்போக்குக் கட்சிகள் முனையவேண்டும் என்ற தீர்மானத்தை லால்குடி மாநாடும், காஞ்சி மாநாடும் நிறைவேற்றியிருக்கின்றன.

கிளர்ச்சி மூலம் கவர்னரின் சம்பளத்தைக் குறைக்க இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் இடந்தராது. எனவே இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அனுமதிபெற முயலவேண்டுமே யொழிய, சென்னை அரசாங்கத்திடம் கிளர்ச்சி நடத்துவதால் யாதொரு பயனும் ஏற்படாது. அது அறியாமையின்பாற்பட்டதாகும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தையே கொளுத்துவோம் என்று வீராப்புப் பேசிக்கொண்டிருந்த உளறுவாயர் சிலர் ஏதேதோ உளறிக்கொட்டித், தம் அறியாமையை வெளிப்படுத்தி, ஆப்பதனை அசைத்துவிட்டு அகப்பட்டுக்கொண்ட குரங்குபோல் விழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

உலகத்தில் நடைபெற்று. வெற்றிபெற்ற விடுதலைக் கிளர்ச்சிகளும், விடுதலைப் போராட்டங்களும் அந்தந்த நாட்டு அரசியல் அமைப்பு விதிகளின் அனுமதியைப் பெற்றே எப்பொழுதும் செயலாற்றுவது என்று முனைந்திருந்தால், அவைகளால் ஒரு செயலையும் செய்திருக்கமுடியாது; ஒரு மாற்றமும்கண்டிருக்க முடியாதே! ஆகாத அரசியல் அமைப்புச் சட்டத்தை அடியோடு மாற்றும் வன்மை கிளர்ச்சிகளுக்கு உண்டே! கிளர்ச்சிக்குச் சக்தி பெருகினால் அது வெற்றிபெறும்; சக்தி குறைந்தால் தோல்வியுறும்; ஆனாலும் கிளர்ச்சியின் புகை அடியோடு அடங்கிவிடாதே! கிளர்ச்சி சட்டத்தை மாற்றவே மாற்றாது என்று கூறிவிடமுடியாதே! அமெரிக்கர்கள் பிரிட்டிஷ் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அனுமதி பெற்றுப் போராட்டம் நடத்தவில்லையே; சட்டத்தை மதிக்காமல்தான் போராடினர்; இறுதியில் வெற்றி பெற்றனர்; சட்டம்தான் வளைந்துகொடுத்தது. ஆந்திரர்கள் தங்கள் ஆந்திர மாநிலப் பிரிவினைக்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழிவிடட்டும் என்று காத்திருக்கவில்லையே; ஆந்திராவில் ஆந்திரர்கள் கிளர்ச்சி செய்தார்கள்; அது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை இணங்கவைத்தது. அதுபோல கவர்னர் சம்பளக் குறைப்புக்குச் சென்னையில் கிளர்ச்சி நடத்தினால், அது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை இணங்கவைக்கமுடியுமே! கவர்னரின் கொள்ளைச் சம்பளக் குறைப்புக் கிளர்ச்சி சென்னை அரசாங்கத்தைத் தாக்கினால், சென்னை அரசாங்கத்தின் வற்புறுத்தல் இந்திய அரசாங்கத்தை இணங்கவைக்க முடியுமே! காந்தியாரின் உப்புக்காய்ச்சும் கிளர்ச்சி பல ஆண்டுகளுக்குப்பிறகு, வெள்ளை அதிகாரத்தை வெளியேற்றும் அளவுக்கு. வெற்றிக்கு வழிகோலிற்றே. அதுபோல கவர்னர் சம்பளக் குறைப்புக் கிளர்ச்சி உடனடியாக பலனளிக்காமல் போனாலும் போகக்கூடும் ஆனால் சில ஆண்டுகளுக்குப்பிறகு அப்படிப்பட்ட கிளர்ச்சியின் எதிரொலி வெற்றியை வாங்கித்தந்தே தீரும்! அந்த உறுதிப்பாட்டின்மீது தான் அறிஞர் அண்ணா அவர்கள் கவர்னருக்குச் சம்பளத்தை அள்ளிக்கொடுக்கும் சென்னை அரசாங்கத்திடம் போராடவேண்டி நேரிட்டாலும் நேரிடக்கூடும் என்னும் கருத்துப்படக் கூறினார்கள்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை அனுசரித்தே செயலாற்ற வேண்டும் என்று கூறுவோர், அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொளுத்துதல், இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தல், புகைவண்டி நிலையங்களில் இந்திப்பெயர்களை அழித்தல். சட்டமன்றத்தின்முன் மறியல் நடத்துதல், வடநாட்டார் கடைகளின்முன் மறியல் நடத்துதல் ஆகிய செயல்கள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை அனுசரித்தே செய்யப்படுபவைகளா என்பதை ஆர அமர சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கவர்னருக்கு ரூ. 9 93,000-ஐ அள்ளிக்கொடுக்கும் சென்னை அரசாங்கத்திடம் சம்பளக்குறைப்புக் கிளர்ச்சி நடத்துவது தவறல்ல; பொருத்தமானதே. அப்படிப்பட்டக் கிளர்ச்சியின் பயனாகக் கவர்னரே சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளக்கூடும்; சென்னை அரசாங்கம் அதனைக் குறைப்பதற்கான முயற்சிகள் எடுக்கக்கூடும்; சென்னை அரசாங்கத்தின் வற்புறுத்தலுக்கு இந்திய அரசாங்கம் இணங்கக்கூடும்! எனவே அறிஞர் அண்ணாவின் கூற்று அவசியமானதே; பொருத்தமானதே!

267

தொடர் கதை

பனிவெளியிலே

[இரா. செழியன்] 3

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

டாக்டர் தங்கம் உள் நுழைந்தபொழுது, ஆஸ்பத்திரி முன் கட்டிடகதின் உயரத்தில் இருந்த கடிகாரம் காலை 9-30 மணியை இசையொலியுடன் அறிவித்துக்கொண்டிருந்தது. சீட்டு வாங்குமிடங்களிலும், பரிசோதனை செய்யுமிடங்களைச் சூழ்ந்தும் கூட்டங்கள் மொய்த்துக்கிடந்தன. நோயாளிகளைப் பார்க்க உள் வருவோரும் பார்த்துவிட்டுத் திருப்புவோரும், கண்கட்டு, கால்கட்டு இவைகளுடன் காத்திருப்போரும், இவர்களை அழைத்து வந்த வண்டி வாகனங்கள், உற்றார் உறவினர்கள், தள்ளு நாற்காலியில் உருட்டி வரப்படும் நோயாளிகள், இவர்களெல்லாம் ஆஸ்பத்திரியின் முன் பகுதியில் நிறைந்துகாணப்பட்டனர். ஆங்காங்கு வணக்கந்தெரிவிப்பவர்களுக்குத் தலையசைத்துக்கொண்டு, தங்கம் தனது கட்டிடத்தைநோக்கி நடந்தாள். மாடிப்பக்கம் திருப்பும்பொழுது, சற்று தூரத்தில் டாக்டர் சஞ்சீவி நடந்துவருவதைப் பார்த்தபின், அவருக்காகச் சற்றுத் தாமதித்து நின்றாள். எப்படித், தன்னையே சிந்தனையில் அமிழ்த்திவிட்டு, அவர் நடந்துவருகிறார்! உண்மையிலேயே பெரும் நிபுணர்! மதிப்பும், ஒருவித பக்தியும் விளங்கிட தங்கம் அவர் வருவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

டாக்டர் சஞ்சீவி அந்த ஆஸ்பத்திரியின் மருத்துவப்பகுதியில் முதன்மையாகத் தலைமை வகிப்பவர். அவருடைய வாழ்வு, திறமை, நினைவு, நேரம் எல்லாம் மருத்துவக்கலைக்கே அர்ப்பணிக்கப்பட்டுவிட்டது என்று கூறலாம். அவருடைய வயது அறுபதை நெருங்கிக்கொண்டிருந்தது. ஆனால் அவருடைய தோற்றத்தில் எவ்வித வாட்டமோ, குறைவோ காணப்படவில்லை. ஐந்தே முக்கால் அடி உயரம் இருந்தபோதிலும், அவருடைய கனத்த சரீரம், அதிலும் நடக்கும்பொழுது ஒரு பக்கம் சற்றுச் சாய்ந்து நடக்கும் தன்மை, அவரது உயரத்தைக் குறைத்துக்காட்டியது. அகன்ற நெற்றி, அதன்மீது பறந்த வெண்மயிர், அவர் பேசும்பொழுதும், சிரிக்கும்பொழுதும், குழந்தையைப் போல் களங்கமற்றிருக்கும். ஆனால் கோபம் வந்துவிட்டால் போதும், உதவி டாக்டர்கள், மாணவர்கள், நர்சுகள் எல்லோரும் நடுங்கிக்கொண்டிருப்பார்கள்—அந்த அளவுக்கு உரத்துச் சத்தம்போட ஆரம்பித்துவிடுவார். அவருடைய பார்வை ரணசிகிச்சை செய்யும் கத்தியைவிட ஆழப்பாய்வது போல் இருக்கும். நோயாளிகள் சொல்லும் பொய், மாற்றங்களெல்லாம் ஒதுக்கிவிட்டு, "இங்கே இதனால்தான் குறை!" என்று அவர் பார்வை கூறிடும். பட்டம், பதவி, பெருமை, தகுதிகள் இவைகளில் எவற்றைப் பற்றியும் கவலைப்படாமல், நாள்தோறும் அடையும் திறமையையே உயர்வாக எண்ணி, நோய்களைக் கண்டு போக்குவதில் அடையும் வெற்றிகளைப் பரிசுகளாக நினைத்து. அவர் வாழ்ந்துவந்தார். வெளியுலகத்தைப் பற்றி அவருக்கு அதிகம் தெரியாது, தெரிந்துகொள்ளவும் மறுத்தார். அந்த ஆஸ்பத்திரியைப் பற்றி நினைக்கும்பொழுது, அவரைப்பற்றி நினைக்காமலிருக்க முடியாது. அந்த ஆஸ்பத்திரியின் ஒரு பகுதியாக அவர் ஆகிவிட்டார். அவருக்கு உதவியாக இருந்து வேலை பார்ப்பதில் தங்கம் தனிப்பெருமையடைந்தாள்.

டாக்டர் சஞ்சீவி மிக அருகே வந்ததும்தான்

தங்கம் நிற்பதைப் பார்த்தார். ஒரு தந்தை தன் மகளைப்பார்த்து, மகிழ்வடைவதுபோல, தங்கத்தைச் சிறிதுநேரம் பார்த்துவிட்டு "என்ன தங்கம்! நேற்று வீட்டிற்கு வந்திருந்தேன். உன்னைக் காணோமே!" என்று கேட்டார்.

"நேற்று வெளியில் போயிருந்தோம்!" என்று பணிவுடன் தங்கம் பதிலளித்தாள். அவர் தன்னை வந்து தேடிவிட்டுப்போனார் என்பதில் ஒரு தனி ஆனந்தம்!

"எங்கே போயிருந்தாய்!"

"தோட்டத்திற்கு!" தோட்டத்தை நினைத்ததும், முதல் நாள் தானிருந்த உல்லாசமும், பொழுதுபோக்கும் அவள் கவனத்துக்கு வந்தது.

"கமலநாதனுடனா? ஆ! இன்னும் புது மணத்தம்பதிகள்போல ஓடிவிளையாடுகிறீர்களா?" என்று டாக்டர் சஞ்சீவி சிரித்தார். தங்கம் நாணத்தால் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். அதைக் கவனித்த சஞ்சீவி, "நான் எங்கேபோயிருந்தேன் தெரியுமா? என் மனைவியை இழுத்துக்கொண்டு, கடற்கரைக்குப் போயிருந்தேன்?" என்று தானாகச் சிரித்துக்கொண்டார்.

சில மாணவிகள் தூரத்தில் வந்துகொண்டிருந்தனர். ஒரு நர்ஸ் அவர்களைக் கடந்து செல்லமுடியாமல், தயக்கத்துடன் தூர நின்றாள்.

"ஓ! நேரமாகிவிட்டது" என்று தன்னைத் தானேகோபித்துக்கொண்டு டாக்டர் சஞ்சீவி, படுக்கையிலிருக்கும் நோயாளிகளைப் பார்த்து வரக் கிளம்பினார். தன்னுடைய அறைக்குச் சென்று, மேலங்கியை மாட்டிக்கொண்டு, தங்கம் உடன் வந்து சேர்ந்தாள். இவர்களின் பின்னால், டாக்டர் சஞ்சீவியின் கீழ் வேலை பார்க்கும் டாக்டர் சீதா, டாக்டர் சிவராமன், கௌரவ உதவியாளர்களாக இருக்கும் டாக்டர் சரளா, டாக்டர் முத்துசாமி, டாக்டர் மோகனரங்கம் முதலியவர்களும் சூழ்ந்துவந்தனர்.

முதல் வார்டில் நுழையும்பொழுது, எல்லோரும் அவர்களுக்காகத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தனர். படுக்கைகளெல்லாம் ஒழுங்காகக்கப்பட்டு, வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. சிறிதுகூட சுருக்கம் காணப்படாமல், சிவப்புக் கம்பளங்களும், வெள்ளைப்போர்வைகளும் விரித்து, மடிக்கப்பட்டிருந்தன. லேசான மருந்து வாசனையும், சுவரில் கழுவப்பட்ட சோப்புத்தண்ணீர் வாசனையும் அந்த இடத்தில் இருந்தது.

டாக்டர் சஞ்சீவியும், அவருடன் வந்த டாக்டர்களும், ஒரு படுக்கையின் அருகில் வந்து நின்றனர். அந்தப் படுக்கையில், முகமெல்லாம் வெளுத்து மிகப் பலவீனமான நாற்பது வயதுள்ள நோயாளி படுத்திருந்தாள். டாக்டரைப் பார்த்ததும், அவள் எழுந்து உட்கார முயன்றாள். "இல்லை, படுத்திரு! இன்றைக்கு எப்படியிருக்கிறது?" என்று டாக்டர் சஞ்சீவி கேட்டார். அவள் எதுவும் பேசாமல் தலையசைத்துக்கொண்டாள்.

ஒவ்வொரு டாக்டருக்கும் ஏதாவது ஒரு நோய் பிடித்தமானதாக இருக்கும்—பிடித்தமானது என்றால், அந்த நோயைப்பற்றி அதிகமாக விரும்பித் தெரிந்துகொண்டிருப்பார்கள். சஞ்சீவிக்கு இருதய நோய் மிக "வேண்டிய" நோயாகும். அதைப்பற்றி விரிவாகவும், நுணுக்கமாகவும் அவர் ஆராய்ந்துகொண்டிருப்பார். அந்தப் படுக்கையிலிருந்த பெண்மணிக்கும் இருதய நோய்தான். எனவே, டாக்டர் சஞ்சீவி அதை மிகக் கவலையுடன் கவனித்தார்.

"தங்கம்! இதைப் பார்!" என்று சொல்லிவிட்டு, அவர் பக்கத்திலிருந்த மேஜைமீது சாய்ந்துகொண்டு நின்றார்.

தங்கம் ஸ்டாதஸ்கோப்பைக் காதில் பொருத்திக்கொண்டு, நோயாளியின் இருதயத் துடிப்புகளைக் கவனித்தாள். இருதயம் பருத்து, பெரிதாயிருந்தது; இருதயத்தின் நான்கு அறைகளையும் கவனித்துக் கேட்டாள்; ரத்தம் வாங்கப்படுவதிலும், விடப்படுவதிலும், சிறு சலசலப்பு இருந்தது, ஸ்டாதஸ்கோப்பை மேலே தூக்கி, இருதயத்தின் சற்று மேலுள்ள இரத்த நாளங்களைப் பரிசோதித்தாள். மேலிருந்து கீழாக மெதுவாகத் தட்டிப் பார்த்தாள். நோயாளியை முதுகுப் பக்கமாகத் திருப்பி சுவாசப்பைகளின் சிறு சத்தங்களைக் கேட்டாள். அவளுடைய மனக்கண்ணில் பெரிதான இருதயம், அடக்கமுடியாமல் துடிதுடிக்கிற இயந்திரத்தைப்போல, ஒழுங்குமீறி அடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

டாக்டர் சஞ்சீவி, சுவற்றில் மாட்டியிருந்த

பலகையை வாங்கி, அதிலிருந்த காகிதங்களைப் புரட்டிப்பார்த்துக்கொண்டிருந்தார். நோயின் வரலாறு, காலம், இவைகளைப்பற்றிய குறிப்புகளெல்லாம் இருந்தன. இருதயத் துடிப்பைக் காட்டும் பட்டம்—மின்னல்போல் சிறுசிறு அலைகளுடன் காணப்படும் கோடுகள்—இவற்றைப் பார்த்தார்

தங்கம் தனது பரிசோதனையை முடித்து எழுந்து நின்றாள். "இதைவிட மிகச்சிறந்த உதாரணமான கேஸ் வேறெதுவும் கிடைக்க முடியாது. நோய் திடீரென்று வரவில்லை, படிப் படியாக வளர்ந்துவந்திருக்கிறது. ரூமாடிக் எண்டோகார்டிடிஸ்....மிட்ரல் ஸ்டேனோசிஸ்...வலதுபக்கத்தில் ஹைபட்ரோபி...இருதய பலவீனத்தில் வருகிற பின் அழுத்தம், இடையிடையே இரண்டுமூன்று துடிப்புகள்....கடைசியாக ஆரிகுலர் பிப்ரிலேஷன்...." என்று மருத்துவ நூல்களுக்கேத் தனிச்சிறப்பாகவுள்ள லத்தீன், ஆங்கில வார்த்தைகளைச் சொன்னாள்.

நோயாளிக்கு இவர்கள் பேசிக்கொள்வது ஒன்றும் புரியவில்லை. கடுமையான வார்த்தைகளைக் கேட்டதும் அவள் மிரண்டுவிட்டாள் அதைக் கவனித்த சஞ்சீவி படுக்கையின் அருகில் உட்கார்ந்து, கையைப் பிடித்துப் பார்த்து "இன்று காலை வலியிருந்ததா!" என்று கேட்டார்.

கையை மார்பின்மீது வைத்து "இங்குதான் வலியிருக்கிறது, உயிர் அப்படியே பறந்து போகும்போலிருக்கிறது" என்றாள்.

"அப்படியெல்லாம் பறந்துபோய்விட நாங்கள் சுலபத்தில் அனுமதித்துவிடமாட்டோம்" என்று சஞ்சீவி சிரித்துக்கொண்டார். "அலட்டிக்கொள்ளாமல் இருக்கவேண்டும். நன்றாகத் தூங்கினால் வலி குறைந்திருக்கும்."

"சாமி! என்னைச் சிக்கிரம் குணமாக்கி அனுப்பிவிடுங்கள்! எனக்கு வீட்டில் வேலையிருக்குங்க!" என்று அவள் வேண்டிக்கொண்டாள்.

"ஆமாம்!" என்று டாக்டர் சஞ்சீவி அந்தப் படுக்கையைவிட்டு நடந்தார். மற்ற டாக்டர்களும் பின்னால் சென்றார்கள். சிறிதுதூரம் போனதும், சஞ்சீவி திரும்பி நின்று அந்த நோயாளியைப் பார்த்தபடி, தன்னுடன் இருப்பவர்களுக்கு அந்த நோயைப்பற்றிச் சொன்னார்

"அவள் மிகக் காலங்கடந்து, இங்கே வந்து சேர்ந்திருக்கிறாள். அவளுடைய நோய் புதிதல்ல. அவளுடைய குடும்பத்திலே இருக்கிறது. அவளுடைய அப்பா செத்துப்போனது இருதய நோய்தான்—அயோர்டிக் அனுயிரிஸம். கள், சாராயம் இவைகளைக் குடித்ததால் அவனுக்கு வந்தது. இவளுடைய தாய் மிகவும் பலவீனமானவள்; எப்பொழுதும் கைகால் மூட்டுகளில் வலியென்றும், தொண்டை வரண்டுபோகிறதென்றும் அவள் அடிக்கடி மருந்து கேட்டுவருவாள். இவளும் அப்படியே ஆரம்பித்தாள். முதலில் கைகால் மூட்டுகளில் வலி, தொண்டைவரட்சி; அத்துடன் சிறுவயதிலேயே, கல்யாணமாகிவிட்டது. இப்பொழுது ஆறு குழந்தைகளுக்குமேல் இருக்கிறது. மேலும், அவள் துணி வெளுக்கும் தொழிலில் இருப்பதால்—அவள் இருப்பது வண்ணாரப்பேட்டையில் மிகக் குறுகலான குடிசையில்—தண்ணீரிலும், நீராவியிலும் பட்டு, வாதசுரம் வந்தது. அப்பொழுதே அவளுக்குத் தெரியாமலே, இருதயநோயும் புகுந்துவிட்டது. இங்கு வந்து கொஞ்சம் குணமானதும், மீண்டும் அவள் அந்தச் சேரிக்குப்போய், தண்ணீரில் வேலைசெய்து வேக்காட்டில் நின்றால், மறுபடியும் நோய் கடுமையாகிவிடும். நம்முடைய முயற்சிகள் பயனற்றதாகிவிடும். ஏனெனில் நாம் இவர்களுடைய நோயைக் குணப்படுத்தி அனுப்புகிறோம். வறுமையும் வேலைக்கடுமையும் இவர்களை விரட்டி இங்குத் திரும்ப அனுப்புகின்றன. நோயைத் தீர்க்கும் முறை நம்மிடமிருக்கிறதேயன்றி, வறுமையைத் தீர்க்கும் முறை நம்மிடமில்லை. பந்தாட்டத்தில் அடிபடுகிற பந்தைப்போல, இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக அவர்கள் செல்கின்றனர். இடையில் திடீரென்று மரணமென்ற வலை தடுத்து கீழே விழச் செய்துவிடுகிறது. புதிய ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்டுவதைவிட, பழைய சேரி ஒன்றை எரித்துவிடுவது நல்லது!" கடைசி வாக்கியங்களைச் சொல்லும்பொழுது டாக்டர் சஞ்சீவியின் குரலில் கடுமையும் கோபமும் தொனித்தது. பின் பெருமூச்சு விட்டுக்கொண்டு, மற்றொரு படுக்கைக்குப் போனார். நோயின் சிக்கல்களைவிட, வெளியுலகத்தில் காணப்படும் சிக்கல்கள் புரியாதவைகளாயிருந்தன.

டாக்டர் சஞ்சீவியும் அவருடைய உதவி டாக்டர்களும் ஒவ்வொரு படுக்கையாகப்

270

பார்த்துக்கொண்டுவந்தார்கள். ஒவ்வொருவரும் சொல்லும் குறைகள், நோயால் படும் வேதனைகள்—அவற்றில் சில அவர்களாக நினைத்துக்கொள்பவை—எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே ஒவ்வொரு படுக்கையை விட்டு நகரவேண்டியிருந்தது.

"இரவு பூராவும் தூக்கமேயில்லை. தோள்பட்டையில் வலி அதிகமாக இருக்கிறது."

"காலையில் என்ன ஆகாரம் சாப்பிடலாம்!"

"இந்தப் பெண் சாப்பாடு கொண்டுவர வேண்டியிருக்கிறது. அவள் வருவதற்கு ஒரு அனுமதிச்சீட்டு தாருங்கள்!" இப்படிப் பல கேள்விகள், வேண்டுகோள்களெல்லாம் சுற்றி வரும்பொழுது வந்தன. நோயாளிகள் சொல்வதை மாத்திரம் வைத்துக்கொண்டு, அவர்களுடைய நோயின் தன்மையை அறிந்துகொள்ள முடியாது. அதிலும் குழந்தைகள் என்றால், அவர்களிடம் பேச்சுக்கொடுத்துத் தெரிந்துகொள்ள நேரம் அதிகமாகும்.

டாக்டர் சஞ்சீவியுடன் மற்ற இடங்களுக்கும் போய்விட்டுவந்ததும், தங்கம் தன்னறைக்குத் திரும்பினாள். இவ்வளவுநேரம் அவர்கள் சுற்றிப் பார்த்துவந்தது நோயாளிகளையல்ல, ஒவ்வொரு கட்டிலிலும், ஒவ்வொருவகை நோயைப் பார்த்தார்கள். ஏதாவது படுக்கை எண்ணைச் சொன்னால், அவர்களுக்கு உடனே நோயின் வகையும், அதற்குச் செய்யப்படும் மருத்துவ முறையும் ஞாபகத்துக்கு வருமே யொழிய, பெயரோ, வேறு அடையாளமோ ஞாபகத்துக்கு வருவதில்லை. தான் இன்னும் பார்த்துக் குறிப்பெடுக்கவேண்டிய ஓரிரண்டு நோயாளிகளைப் பார்த்துவிட்டு தங்கம் வந்தாள். இதற்குள் மணி பன்னிரண்டுக்கு மேலாகிவிட்டது. ஆஸ்பத்திரியிலிருந்த நடமாட்டம் குறைந்து, அமளி அடங்கியது. சுற்றிப் பார்க்கவேண்டியதை முடித்துக்கொண்டு, டாக்டர்கள் வந்துகொண்டிருந்தனர். வேலைகளை முறை மாற்றிக் [illegible] கொள்ளவும், மாற்றிக்கொண்டும், நர்சுகள் சென்றபடி இருந்தனர். உணவு அனுப்பும் பகுதியிலிருந்து தள்ளு வண்டிகள் உணவுப் பண்டங்களைத் தாங்கிக்கொண்டு பல பகுதிகளுக்கும் உருண்டுகொண்டிருந்தன.

பகலுணவு முடிந்ததும், தங்கம் குறிப்புப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு உட்கார்ந்தாள். அந்தச் சமயம் டெலிபோன் மணியடித்தது.

"யார் வேண்டும்?"

"டாக்டர் சாந்தா!"

"அவள் போய்விட்டாள்! மாலை நான்கு மணிக்கு வருவதாக என்னிடம் சொன்னாள்."

"பேசுகிறது டாக்டர் தங்கமா?"

"ஆமாம். என்னவேண்டும்?"

"உடனே சற்று காஷுவல்டிக்கு வாருங்கள். ஒரு அவசர கேஸ்!"

தங்கம் மேல்கோட்டை மாட்டிக்கொண்டு, ஆஸ்பத்திரி முதல் வரிசையிலுள்ள கட்டடத்துக்குப் போனாள்.

அங்கு ஒரு பெண் மயக்கமுற்ற நிலையில் பலகைமீது போடப்பட்டிருந்தாள். நாடித் துடிப்பு மிகவும் குறைவாக இருந்தது. உடல் மெலிந்தும், பலவீனமாகவும் காணப்பட்டது. வெய்யிலில் அலைந்துவந்த களைப்பில் அவள் மயக்கம் போட்டு விழுந்திருக்கவேண்டும். அவளுக்கு வயது, இருபது அல்லது இருபத்து ஒன்றுக்குமேல் இருக்காது. பூரண கர்ப்பவதியாகவும் இருந்தாள்.

"இந்தக் கர்ப்பத்தில், இவர்கள் ஏன் தனியாக வருகிறார்கள் என்று தெரியவில்லை?" என்று டாக்டர் தங்கம் சொன்னாள்.

"ஆஸ்பத்திரிக்கருகில் மயக்கம் போட்டுக் கிடந்தாளாம். தூக்கிக்கொண்டு வந்து போட்டார்கள். யாராவது அனாதையாக இருக்கும்" என்று நர்ஸ் சொன்னாள்.

"அப்படிச் சொல்லமுடியாது" என்று தங்கம் அவளை மயக்கந் தெளிவிப்பதற்கான முதற்சிகிச்சையைத் தந்துகொண்டிருந்தாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் மயக்கம் போட்டிருந்த பெண் லேசாகக் கண்விழித்துப் பார்த்தாள். உயரே சுழன்றுகொண்டிருந்த விசிறி, பின் ஓரத்திலிருக்கும் வெள்ளைச் சுவர், பின் [illegible] அருகில் நிற்கும் நர்சு, டாக்டர் தங்கம்—ஒவ்வொன்றாக கவனித்தாள்.

"நான் எங்கேயிருக்கிறேன்" என்று கூவிக்கொண்டு அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

"அலட்டிக்கொள்ளாமல் இரு" என்று நர்சு பிடித்து உட்காரவைத்தாள்.

(தொடரும்)

[5/1 பகுதி]

271

அப்படிச் செய்யாதீர் அன்பரே !-2

[இரா. நெ.]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளையும் ஒரே வடிவில், அதுவும் தேவநாகரி வரிவடிவில் எழுதவேண்டும் என்பது தோழர் அழகேசன் அவர்களின் முக்கிய குறிக்கோள். இந்தக் கருத்தை வடநாட்டிலுள்ள இந்தி மொழியாளர்கள் பலரும் அடிக்கடி வற்புறுத்திவருகின்றனர். இந்திமொழியாளர்களின் ஆதிக்கம் நிறைந்த காங்கிரஸ் கட்சியும், இந்திய மொழிகள் அனைத்தையும் தேவநாகரி வடிவில் எழுத வேண்டும் என்று, வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் சொல்லிவருகிறது. அப்படி எழுதிவிட்டால் இந்தியாவின் பல்வேறு மொழியாளர்கள் ஒருவரையொருவர் நன்றாக அறிந்துகொள்ளவும், அதன்மூலம் அன்பைப் பெருகவிடவும், அதன்மூலம் ஒன்றுபட்டு வாழவும் இயலும் என்பது தோழர் அழகேசனுடையதும், அவர் சார்ந்துள்ள கட்சியினுடையதும் ஆன எண்ணமாகும். இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளையும் ஒரே வரிவடிவில் எழுதி, எழுத்துக்களைக் கூட்டிப் படிக்கக் கற்றுக்கொண்டாலே, ஒருவன் எல்லா மொழிகளையும், அம்மொழிகளைப் பேசும் மக்களின் கருத்துக்களையும் அறிந்துகொண்டு விட முடியுமா? எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தின் வரிவடிவுதான் பிரெஞ்சு, ஜெர்மனி முதலிய ஐரோப்பிய மொழிகளுக்கும் வரிவடிவாக அமைந்திருக்கிறது. அப்படியிருந்தும் ஆங்கிலத்தை எழுதப்படிக்கத் தெரிந்த ஒருவன் பிரெஞ்சு, ஜெர்மனி மொழிகளை அந்தந்த மொழிகளின் உச்சரிப்புக்கேற்றபடி எழுத்துக் கூட்டிப் படிக்கவோ, சொற்களின் பொருள்களை உணர்ந்து கொள்ளவோ முடிவதில்லை. ஒரே எழுத்துக்களால் ஆன சொல்லை ஆங்கிலேயன் ஒருவிதமாகவும், பிரெஞ்சுக்காரன் வேறொரு விதமாகவும், ஜெர்மனிக்காரன் மற்றொருவகையாகவும் உச்சரிக்கிறார்கள். பெரும்வகையில் ஒற்றுமை கொண்ட அந்த மொழிகளுக்கே வரிவடிவு ஒன்றாக அமைந்தாலும், ஒலிவடிவு ஒன்றாக அமையவில்லையே, அப்படியிருக்க, ஒலி, அமைப்பு ஆகியவைகளில் மிகமிக வேறுபாடு கொண்ட இந்திய மொழிகள் எப்படி ஒரே வரிவடிவைக் கொள்ளமுடியும், கொண்டாலும் எப்படி ஒரே உச்சரிப்பை உச்சரிக்க முடியும்? தோழர் அழகேசன் அவர்களின் ஆராய்ச்சியின்படி, தேவநாகரியில் எழுதக்கூடிய உச்சரிப்பு எழுத்துக்களை மட்டும் வைத்துக்கொண்டு, பிற உச்சரிப்பு எழுத்துக்களையெல்லாம் அந்தந்த மொழிகளைவிட்டே அறவே ஒழித்துக்கட்டிவிடுவது என்று வைத்துக்கொண்டாலும் தமிழன் பிற மொழிகளை எழுத்துக்கூட்டிப் படிக்கமுடியுமே தவிர, பிற மொழிப் பொருள்களை எப்படியுணர்ந்து கொள்ளமுடியும்? அந்தந்த மொழியிலே தனித்தனியாகப் பயிற்சி பெற்றாலொழிய அந்தந்த மொழிப் பொருள்களை அவன் எவ்வாறு உணர்ந்துகொள்ளமுடியும்? எல்லா மொழிகளையும் ஒரே வரிவடிவில் எழுதிவிட்டாலே, வேற்று மொழியாளர்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளலாம் என்று அன்பர் அழகேசனார் கூறுகிறாரே, எந்த அளவுக்கு அது அறிவுக்குப் பொருந்தி வருகிறது என்பதை ஆய்ந்துபார்மின்! பிற இந்திய மொழிகளை எழுத்துக்கூட்டிப் படிக்கக்கூடிய செயல் ஒன்றுக்காகவா, இயற்கையோடு இயற்கையாய் வளர்ந்துவந்த தமிழ், தன்னுடைய எழுத்துக்களிலே சிலவற்றை இழந்து, இலக்கண விதிகளையெல்லாம் மாற்றி, இலக்கியச் சொற்களையெல்லாம் சிதைத்து உருமாற்றி, சொற்பொருள்களிலெல்லாம் மயங்கி நின்று,

பெருமை குன்றிச், சீரழிந்து தத்தளிக்கவேண்டும்? தமிழ் தன் வளம், சிறப்பு, உயர்வு, பெருமை, சொல்லழகு, பொருள்செறிவு, இலக்கண வரம்பு, எழில், எல்லாவற்றையும் தேவநாகரி எழுத்துக்குப் பலியிடத்துணிய வேண்டுமாம்! தேவநாகரி தமிழுக்கு இணங்கி வராதாம்; ஆனால் தமிழ் தேவநாகரிக்கு இணங்கி, அதற்குமுன் மண்டியிட்டுக்கிடக்க வேண்டுமாம்! என்னே தோழர் அழகேசனின் அறியாமை இருந்தவாறு!

எல்லா மொழிகளும் ஒரே வரிவடிவில் எழுதப்பட்டால், அச்சு எழுத்துக்கள் வார்க்க, டைப் பொறியில் எழுத்துக்களை அமைக்க, தந்தி எழுத்துகளாகப் பயன்படுத்த அந்த வரிவடிவு ஏற்றதாக அமைந்துவிடுவதோடு மட்டுமல்லாமல் மக்களால் எளிமையாகக் கையாளப்படுவதாகவும் ஆகிவிடும் என்றால், அதற்கு தேவநாகரி வரிவடிவைக் கொள்ள வேண்டிய அவசியமில்லையே, உலகம் முழுவதற்கும் பயன்படக்கூடிய மாதிரியில் இருக்கிற ஆங்கில வரிவடிவையே ஏற்றுக்கொள்ளலாமே! ஒற்றுமையை ஏனோ இந்தியா அளவோடு நிறுத்த விரும்புகிறார் அன்பர் அழகேசன்; அதனை உலகம் முழுவதற்கும்கூட நீட்டலாமே!

தமிழின் முதலெழுத்துக்களான ஐ, ஔ, ங, ஞ, ழ, ற, ன என்ற எழுத்துக்களை அறவே அகற்றிவிட்டால், தமிழின் பாரம் குறையுமாம்! இந்த மொழிநூல் புலவர் கூறுகிறார்! இந்த ஏழு எழுத்துக்களைக் கற்றுக்கொள்வது கடினமா? அல்லது இந்த ஏழு எழுத்துக்களையும் அகற்றிவிட்டு, வழிவழிவந்த இலக்கண விதிகளையும் மாற்றி, வழிவழிவந்த சொல்லோசைகளையும் நீக்கி, சொற்பொருள்களிலே இடர்ப்பாடுற்று தத்தளிப்பது கடினமா? என்பதைச் சிற்றறிவுடையோரும் சிந்தித்துப் பார்க்கலாகுமே! தமிழின் பாரத்தைக் குறைக்க இந்த ஏழு எழுத்துக்களையும் நீக்கிவிடலாம் என்கிறார் அழகேசனார்! தமிழின் பாரத்தைக் குறைப்பதற்குத்தானே இத்தகைய எழுத்துக்களைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர் தொகுத்தனர் என்பதை அவர் அறியவேண்டும். இயற்கையோடு இயைந்து வளர்ந்துவந்த தமிழ் மொழியின் ஒலிகளையெல்லாம் கூறுபடுத்தித் தொகுத்துப் பார்க்கும்போது முப்பது ஒலிகள் முக்கியமாக விளங்குவதைக் கண்டார்கள். உலகிலுள்ள கருப்பொருள்கள், உரிப்பொருள்கள் ஆகியவற்றையெல்லாம் தனித்தனியே வேறுபடுத்தியுணர வெவ்வேறு சொற்களை உருவாக்க இந்த முப்பது எழுத்துக்களும் இன்றியமையாதனவாகக் கண்டார்கள். அவைகளில் ஏழு எழுத்துக்களைத், தான்தோன்றித்தனமாக, அறிவு ஆராய்ச்சியின்றி, காரண காரியமின்றி, நீக்கிவிடுவது என்றால் ஏற்படும் இடர்ப்பாடுகளை தமிழ் வல்லார் தாமே நன்கு உணரமுடியும்? அன்பர் அழகேசன் எப்படி உணர்வார்? மொழிநூல்வல்லுநர்கள் மட்டுமே உய்த்துணர்ந்து பார்க்கக்கூடிய ஒரு துறையில், தோழர் அழகேசன் கூட்டல் கழித்தல் போட்டு வேடிக்கை செய்துபார்க்கிறார்! இவர் போன்றாரை உள்ளத்தில் கொண்டுதான், பெருந்தகை வள்ளுவனார், "கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர், குழாத்துப் பேதை புகல்" [கழுவாத காலை நல்ல படுக்கையில் வைப்பது போன்றதாகும், அறிவாளிகளின் கூட்டத்திற்கிடையில் முட்டாள் புகுவதும் ஏதேனும் சொல்லுவதும்] என்று கூறினார் போலும்!

ஒரு சொல் பல பொருள்களை உணர்த்துவதைவிட, ஒவ்வொரு பொருளையும் உணர்த்த ஒவ்வொரு சொல் இருப்பதையே சிறந்த மொழியின் அடையாளமாக அறிஞர்கள் கருதுவர். இந்த வகையில் ஐரோப்பிய மொழிகளில் பிரெஞ்சு மொழியைச் சீரியதாகக்கொள்வார்கள். பிரெஞ்சு மொழியில் கூடுமானவரையில் இரண்டுமூன்று பொருள்களைத் தந்து குழப்பும் சொற்கள் மிகுதியாக இருக்கவில்லை என்று கூறுவார்கள். ஐரோப்பாவில், பெரும் பெரும் உடன்படிக்கைகளையெல்லாம், அவை இரண்டு மூன்று பொருள்கள் தந்து குளறுபடி ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகப், பெரும்பாலும் பிரெஞ்சு மொழியில் எழுதுவார்களாம். உலக மொழிநூல் அறிஞர்களின் கருத்து அவ்வாறிருக்க, தமிழில் ஏழு மூல எழுத்துக்களை நீக்கிவிடலாம், அவற்றிற்குப் பதிலாக வேறு எழுத்துக்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம், இடம் நோக்கிப் பொருள்கொள்ளலாம் என்று அமைச்சர் அழகேசனார் கூறுகிறாரென்றால், அவரது அறியாமை இருந்தவாறு என்னே, என்னே என்று எவ்வளவு எள்ளி நகையாடற்பாலது என்பதை ஓர்மின்! பொருள்களின் வேறுபாடு உணர்த்தி நிற்கும் எவ்வளவோ சொற்களை இந்த ஏழு எழுத்துக்களும் காப்பாற்றிவருகின்றனவே! இந்த ஏழு எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளுவது 'பாரமா'! அல்

லந்து ஆயிரக்கணக்கான சொற்களின் வேறுபாடு தெரியாமல் விழிப்பது 'பாரமா'? என்பதை அறிவுடையாரெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் உண்மை விளங்காமற்போகாது!

பெரும்பாலான உலக மொழிகளுக்கில்லாமல், தமிழ் மொழிக்கு இருக்கும் தனிச் சிறப்பு என்னவென்றால், எழுத்துக்களின் கூட்டு உச்சரிப்பே சொற்களின் உச்சரிப்பாக அமைந்துவிடுவதுதான். சிற்சில சொற்களில் மட்டுமே சிற்சில ஒலிகள் சிறிது வேறுபட்டு ஒலிக்கும்; ஆனால் உருத்தெரியாத அளவுக்கு ஓரிடத்திலும் ஒரு எழுத்தும் மாறுபட்டு ஒலிக்காது. எழுத்துக்களின் உச்சரிப்பு ஒருவிதமாகவும், அவற்றை எழுத்துக்கூட்டி சொற்களாக உச்சரிக்கும் போது வேறுவிதமாகவும் அமைந்துவிடுவதை ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற மொழிகளில் காணலாம். பெரும்பாலான சொற்களின் உச்சரிப்பைத் தனித்தனியாக அறிந்துகொள்ளவேண்டிய இடர்ப்பாடு அந்த மொழிகளில் உண்டு. அத்தகைய இடர்ப்பாடு இதுவரையில் தமிழில் இல்லாமலிருந்தது. அந்த இடர்ப்பாட்டைப் புதிதாகப் புகுத்தும் பணியைத் தோழர் அழகேசன் ஏற்றுக்கொண்டுள்ளார்! அரம் என்று எழுதி, இரும்பு அரம் என்று உணர்த்தவேண்டிய இடத்தில் 'அரம்' என்றும், ஈகை என்ற பொருளை உணர்த்தவேண்டிய இடத்தில் 'அறம்' என்றும் உச்சரிக்கலாம் என்று அவர் கூறுகிறார். அதுபோலவே, மரம், சோரு, பாரு, மரு போன்ற சொற்களை எழுதி பொருள் வேறுபாடு நோக்கி மறம், சோறு, பாறு, மறு என்று உச்சரிக்கவேண்டும்! வருங்காலத் தமிழ் மாணவர்கள் வெறும் எழுத்துக்களின் உச்சரிப்பை மட்டும் கற்றுக்கொண்டால் போதாது, பொருள், இடம் நோக்கிச் சொற்களின் உச்சரிப்பையும் தனித்தனியாகக் கற்றுக்கொள்ளவேண்டும்! இப்படியெல்லாம் மிகத்தொல்லைப்பட்டு பொருள் புரிந்துகொள்ளவேண்டிய நிலையைப் புதிதாக உற்பத்தியாக்குவது அன்பர் அழகேசனுக்குப் 'பாரமா'கப் படவில்லை; ஏழு எழுத்துக்களின் வரிவடிவத்தைக் கற்றுக்கொள்வது மட்டும் 'பாரமா'கத் தென்படுகிறது!

ஆங்கிலம், நான்கு வரிவடிவில் கற்றுத் தீரவேண்டிய அவசியத்தில் இருந்துவருகிறது. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தின் முதலெழுத்தை எடுத்துக்கொண்டால், அதனை A, a, 𝒜, 𝒶, என்ற நான்கு விதத்தில் அறிந்துகொள்ளவேண்டிய இன்றியமையாத நிலையிலிருக்கிறோம். ஆங்கிலத்தின் 26 எழுத்துக்களை 4 விதங்களில் அதாவது 104 வரிவடிவங்களில் கற்றுத் தீரவேண்டிய நிலையிலிருந்தும், ஆங்கிலம் வளர்ச்சிபெறுவதிலோ அல்லது உலகப்பொதுமொழி ஆவதிலோ தடங்கல் ஏதும் இருக்கிறதா என்பதை அமைச்சர் அழகேசன் சிந்தித்துப்பார்க்கவேண்டும். தமிழின் வரிவடிவத்தை இன்னும் எளிமையாக்கும் முயற்சி தமிழறிஞர்களால் எடுக்கப்பட்டுவருகிறது. அத்தகைய முயற்சி வெற்றிபெற வெற்றிபெற தமிழின் வரிவடிவம் பிறமொழிகளின் வரிவடிவத்தைவிட எவ்வளவோ எளிமையும், ஏற்றமும் பெற்றதாகுமே? தமிழிற்கு இப்பொழுதுள்ள வரி வடிவத்தை வைத்துக்கொண்டு பார்த்தாலும் கூட ஆங்கிலத்தைவிட எவ்வளவோ எளிமையாயிற்றே! அத்தகைய ஆங்கிலம் அவ்வளவு வரிவடிவங்களை வைத்துக்கொண்டு வளரும்போது, அதைவிடக் குறைவான வரிவடிவங்களை வைத்துக்கொள்ளக் கூடிய தமிழ் எப்படி வளராமற் போய்விடும்?

உலகிலுள்ள சிறந்த மொழியாளர்கள் எல்லாம் தத்தம் மொழியின் வரிவடிவத்தில் கூட்டலும், குறைத்தலும், மாற்றலும், திருத்தலுமான சீர்திருத்தங்களைச் செய்ய முனைகிறார்களே யொழிய, ஒலிவடிவத்தில் மாற்றம் செய்யத் துணிவுகொள்வதில்லை; அதனால் ஏற்படும் இடர்ப்பாடுகளையெல்லாம் அவர்களெல்லோரும் நன்கு உணர்கிறார்கள். மொழிநூல் வல்லுநர்கள் செய்ய அஞ்சும் செயலைத் தோழர் அழகேசன் பெரும்போக்காக, விளைவைப்பற்றி அறியாமல் செய்ய நினைக்கிறார். தோழர் அழகேசன் அவர்கள் தமிழில் ங, ஞ, ற, ன போன்ற எழுத்துக்களுக்குப் பதிலாக முறையே ந, ந, ள, ர, ந என்ற எழுத்துக்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மிக எளிதாகக் கூறிவிட்டார். ஆங்கில மொழிவல்லுநர்கள் எவ்வளவோ பேர்கள் தோன்றி மொழியாராய்ச்சி நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் யாரும் ஆங்கிலத்தில் 'B' மட்டும் இருந்தால் போதும், 'P' வேண்டாம், 'P' வரும் இடங்களில் 'B'யையே போட்டுக்கொள்ளலாம் என்று கூறியதில்லை; அதுபோலவே K, Q, J, T, W, X, Z ஆகிய எழுத்துக்களுக்குப் பதிலாக முறையே C, CU, G, D, UU, S, S போன்ற எழுத்துக்களைப் பயன்படுத்திக்கொள்

ளலாம் என்று சொல்லியதில்லை! அவ்வளவு அறிவற்றவர்கள் அங்கு தோன்றியதில்லை! ஆனால் நமது நாட்டில் எடுத்துக்காட்டுக்காக ஒருவர் தோன்றியுள்ளார்!

இப்பொழுதே தமிழர்களில் சிலர் 'ன'கரத்துக்குப் பதிலாக 'ந'கரம் போட்டு எழுதுகிறார்களாம், 'ற'கரத்திற்குப் பதிலாக 'ர'கரம் போடுகிறார்களாம், பாண்டிய நாட்டில் சிலர் 'வாழைப்பழத்'தை, 'வாளப்பளம்' என்றும் 'தமிழை', 'தமிள்' என்றும் வழங்குகிறார்களாம், ஆகவே ன, ற, ழ ஆகியவற்றை ந, ர, ள என்று மாற்றலாம் என்று வாதிட்டு நிற்கிறார் 'பெரும் பேராசிரியர்—மொழிநூற் புலவர்—பல்கலைக்களஞ்சியம்' தோழர் அழகேசன் அவர்கள். அமைச்சர் அழகேசனாருக்கு முன்மாதிரியாக அமைந்த மொழியாராய்ச்சித்துறை வல்லுநர்கள் யார், யாரெல்லாம் பார்த்தீர்களா! யார் யார் தமிழைப் பிழைபட பேசியும், எழுதியும் வருகிறார்களோ அவர்களெல்லோரும் அன்பர் அழகேசனாருக்குத் தமிழ்ப் பெரும் பேராசிரியர்களாக விளங்குகிறார்கள்! தொல்காப்பியனார் தாம் கூறும் இலக்கண விதிகளுக்குச் சான்று காட்டவேண்டிய இடங்களிலெல்லாம், "என்று கூறியுள்ளார்கள் புலவர்கள்," "என்று சொல்லியுள்ளார்கள் அறிவுடையோர்", "என்று பகர்ந்துள்ளார்கள் எல்லாம் அறிந்தோர்" என்ற முறையில்தான் கூறுகிறார். ஆனால் அன்பர் அழகேசனாருக்கு 'வாளப்பளம்' என்று கூறுவோரெல்லாம் தமிழ்ப்பேராசிரியர்களாகத் தோன்றுகிறார்கள். எனவேதான் போலும் தோழர் அழகேசன் அவர்கள் தம் பெயரை 'ஓ வி. அழகேசன்' என்று குறிப்பது தவறு என்று கருதித், தாம் எழுதும் கட்டுரையில் 'ஓ. வி. அளகேசன்' என்று போட்டிருக்கிறார்! ஒவ்வொரு நாட்டிலும் சந்தைக் கடையை எடுத்துக்காட்டாக வைத்துக் கொண்டு, அந்தந்த நாட்டு மொழிகளை அவ்வப்போது திருத்தம் செய்ய, அந்தந்த நாட்டுக்காரர்கள் முயன்றிருப்பார்களேயானால், ஒவ்வொரு நாட்டு மொழியும் எவ்வளவோ, உருக்குலைந்து, உலகெங்கும் உள்ள மொழிகள் காட்டுக்கூச்சலாக எப்பொழுதோ மாறியிருக்கும்! பிழை செய்பவர்கள், பிழைசெய்யாதவர்களைப் பார்த்துத் திருந்துவதுதான் உலகவழக்கம்; அறிவுடையோர் கூறுவதும் அதுதான். ஆனால் அமைச்சர் அழகேசன் கூறுகிறார் பிழை செய்பவர்களைப் பார்த்துப் பிழை செய்யாதவர்கள் திருந்தவேண்டும் என்று. 'வாளப்பளம்' என்று கூறுவோரைக் கண்டு, 'வாழைப்பழம்' என்று கூறுவோர் தம் போக்கை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று அவர் கூறுவது எவ்வளவு அறிவு குறைந்த தன்மையது்தான் என்பதை ஓர்மின் 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்று தொல்காப்பியனார் கூறினர். ஆனால் தோழர் அழகேசன் அவர்கள் அதனை அடியோடு மாற்றி, "உலகம் என்பது இழிந்தோர் மாட்டே" என்று நிலைநாட்ட முயலுகிறார்போலும்!

தோழர் அழகேசன் அவர்கள் "புராதன இந்தியாவின் ஆத்மீக வாழ்வுக்கும் அற்புத ரசனைக்கும் அதன் பாஷைகள் துணைபுரிந்தன" என்று குறிப்பிடுகிறார். புராதன காலத்தில் எல்லாமொழிகளும் ஒரே வரிவடிவத்தை வைத்துக்கொண்ட காரணத்தாலா அவர் நினைக்கிற நிலைமை அப்பொழுது ஏற்பட்டது? அல்லவே! மொழிகள் தனித்தனியாகவே இருந்து அந்த நிலையை உண்டாக்கின என்று அவர் ஏற்றுக் கொள்வாரேயானால், எப்படி அதே நிலைமை இப்பொழுது பயன்படாமற் போகும்? எல்லா மொழிகளையும் ஒரே வரிவடிவில் எழுதவேண்டும் என்பதற்கு என்ன அவசியம் இப்பொழுது ஏற்பட்டுவிட்டது? தொல்லைகள் மிகுவதைத் தவிர ஏற்படும் உருவான பலன் என்ன?

"உயர்வு தாழ்வுப் பேச்சுக்கு இடமின்றி எல்லா பாஷைகளையும் சேர்த்தே பார்க்கவேண்டும்" என்பதுதான் தோழர் அழகேசனாரின் முடிந்த முடிவு என்றால், தமிழின் எழுத்துக்களைக் குறைத்துச் சிதைத்துத், 'தமிழைக் குற்றுயிரும் குறையுயிருமாக வைத்துச் சீரழிப்பதைவிட, தமிழையும், பிற மொழிகளையும் அடியோடு அழித்துவிட்டு, இந்திமொழியையும் தேவநாகரி வரிவடிவையும் இந்தியா முழுவதிலும் பரப்புவதற்கு அவர் முயற்சி செய்வாரேயானால், வடநாட்டாருக்காவது நல்லபிள்ளையாக நடந்துகொண்ட பெயர் அவருக்குக் கிடைக்கும்; இன்னும் நல்ல பதவி உயர்வு வடநாட்டில் கிடைத்தாலும் கிடைக்கக்கூடும்.

"இப்படிச் செய்யலாமா பாருங்கள்" என்று கூறும் அன்பர் அழகேசனாருக்கு இறுதியாக ஒன்று மட்டும் கூற விரும்புகிறோம்:—அது, "அப்படிச் செய்யவேண்டாம் அன்பரே! தமிழின் ஏழு எழுத்துக்களை அறவே நீக்கிவிட்டுத்

உருவழகு கொடுத்த உரவோன்

[எழினி]

சேரமான் கருவூரேறிய ஒள்வாட்கோப்பெருஞ் சேர லிரும்பொறை என்பவன் சேரநாட்டை ஆண்டுவந்த சேர மன்னர்களுள் புகழ்பெற்ற ஒருவனாவான். அவன், இரும்பொறை என்று வழிவழியாக வளர்ந்துவந்த சேரர்குடி ஒன்றினைச் சார்ந்தவன். இரும்பொறை என்ற அந்தச் சேரர் குடியில் தோன்றிய அரசர் களெல்லாம், மிக்கப் பெயரும் புகழும் பெற் றுத் திகழ்ந்தவர்களாவார்கள்.

ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறை, அரசர்க்கு அமைந்திருக்கவேண்டிய பண்புக ளெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றுச், சீரும் சிறப்பும் பொருந்த வாழ்ந்துவந்தான். அன்பு, அருள், அறிவு, ஆற்றல் ஆகிய சீரிய பண்பு களுக்கு அவன் நிலைக்களனாய் நின்று விளங்கி னான். அவனது படைகள் நாற்புறமும் சென்று, வெற்றிவாகைசூடி மகிழ்ந்தன. அவன் கொங்கு நாட்டைச் சேர்ந்த கருவூரையும், அதனைச் சுற்றியுள்ள பகுதியையும் வென்று தன் ஆதிக் கத்தின் கீழ்க் கொண்டுவந்தான். பெரும் போருக்குப் பிறகே கருவூரைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டி ஏற்பட்டது. அதனால் தனது வெற்றியை மிகச்சிறப்பான விழாவின் மூலம் கொண்டாட எண்ணினான். கருவூருக்கும் அதனைச் சுற்றியுள்ள பகுதிக்கும் தானே பேரரசன் என்பதை அறிவிக்கக், கருவூரில் முடிசூட்டு விழா ஒன்றிற்கு ஏற்பாடு செய் தான். அவ்வாறே தனி அரியணை ஏறி முடி சூட்டிக்கொண்டு வீறுடன் விளங்கினான். அவன் கருவூரைவென்று முடிசூட்டிக்கொண்ட

தமிழின் 'பாரத்'தைத் தாங்கள் குறைப்பதை விட, தாங்களும் தங்கள் வழிவழித் தலைமுறை யினரும் தமிழை அறவே மறந்துவிட்டு, இந்தி யையே சொந்தமொழியாக ஏற்றுத், தமிழகத் திற்கு வராமல், வடநாட்டிலேயே தங்கிவிடுவீர் களேயானால், அதுவே தமிழுக்கு எவ்வளவோ 'பாரம்' குறைந்தது மாதிரிதான்! தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் பெருந்தொல்லையும் பெரும் பாரமும் அந்த ஏழு எழுத்துக்கள் அல்ல; தாங்கள்தான்! தாங்கள் தமிழை அறவே மறந்து வடநாட்டிலேயே, வடநாட்டவரோடு வடநாட்டவராய்த் தங்கிவிடுவீர்களேயானால், 'தமிளநாக இருப்பதை வெருத்து இந்திக்கார நாக மாரிய தோளர் அளகேசந் வாள்க! அரம் காத்து மரம் போர்ரிய மரக்குடி மரவர் மகிள்ந்து வளர்த்த செளுமை கொளித்த தமி ளய் அரவே மரந்த தோளர் அளகேசந் வாள்க!! வவ்வால்தந்மையிலிருந்து மாரிய அந்பர் அள கேசந் வாள்க !!! அந்நநமே எந்நாந்றும் வாள நிநைந்துள்ள தோளர் அளகேசந் நீடூளி வாள்க !!!!' (தமிழனாக இருப்பதை வெறுத்து இந்திக்காரனாக மாறிய தோழர் அழகேசன் வாழ்க! அறம் காத்து மறம் போற்றிய மறக் குடி மறவர் மகிழ்ந்து வளர்த்த செழுமை கொழித்த தமிழை அறவே மறந்த தோழர் அழகேசன் வாழ்க!! வௌவால் தன்மையி லிருந்து மாறிய அன்பர் அழகேசன் வாழ்க !!! அங்ஙனமே என்ஞான்றும் வாழ நினைந்துள்ள தோழர் அழகேசன் நீடூழி வாழ்க !!!!) என்று தங்களுக்கு விருப்பமான தமிழ் நடையில். தங் களை இறுதியாக ஒரு முறை வாழ்த்தி வேண்டு மானாலும் வழி அனுப்பிவைக்கிறோம்!" என்ப தாகும்.

காரணத்தாலும், அவன் வாள்வலி மிக்கவனாக விளங்கிய காரணத்தாலும் அவனுக்கு கருவூரேறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரலிரும்பொறை என்ற பெயர் சிறப்பாக வழங்குவதாயிற்று.

கோப்பெருஞ்சேரலிரும்பொறை மன்னனாக இருந்தது மட்டுமல்லாமல், மருத்துவக்கலைஞனாகவும் விளங்கினான். யார் மாட்டும் அருள் செலுத்த அந்தக் கலை அவனுக்குப் பெரிதும் பயன்பட்டது. தீராத நோயுடையோரின் துன்பத்தையெல்லாம் தீர்த்துவைக்கும் பண்புடையவனாக இருந்துவந்தான். அதனால் குடிமக்களிடத்தில் நெருங்கிய தொடர்பு கொள்ளவும், குடிமக்களது அன்பைப் பெறவும் அவனுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அவன் குடிமக்களிடத்தில் அளிசெய்யும் தன்மையைப் போற்றிப் புகழாதார் இல்லை. அவன் புகழ் எங்கும் பரவிற்று.

தமிழ் என்றால் ஆர்வங்கொள்வதும், தமிழ்ப் புலவர் என்றால் அவர்களைப் போற்றிப் புகழ்வதும், செய்யுள் நயம் என்றால் அதனைக் கேட்டு மகிழ்வதும் இரும்பொறையினிடத்துக் காணப்பட்ட தனிச்சிறப்புகளாகும். இரும்பொறையின் கல்வி கேள்வி அறிவு ஆற்றல்களைக் கேட்டறியும் புலவர் பெருமக்கள் அவனைத் தேடி வருவதும், அவனிடம் நட்புரிமைபூண்டு வாழ்வதும், அவன் கொடுக்கும் பரிசில்களைப் பெற்றுச் செல்வதும் வழக்கம்.

அவன் வாழ்ந்துவந்த அதே காலத்தில் நரிவெரூஉத்தலையார் என்ற சிறந்த புலவரும் வாழ்ந்துவந்தார். அவர் பாடிய செய்யுட்களில் ஏதேனும் ஒன்றில், "நரிவெரூஉத்தலை" என்ற சொற்றொடரை நயம்பட வைத்துப் பாடிய காரணத்தால் அவருக்கு அப்பெயர் வந்ததோ அல்லது நரியும் கண்டு அஞ்சும் அளவுக்கு அழகற்ற தோற்றம் உடையவராக இருந்த காரணத்தால் அப்பெயர் ஏற்பட்டதோ, தெளிவாக அறியக்கூடவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் சங்ககாலக் குறிப்புகளிலிருந்து அறியவருகின்றது; அது என்னவென்றால், அப்புலவர் அழகற்ற தோற்றங்கொண்டிருந்தார் என்ற செய்தியாகும். உடலின் அழகையெல்லாம் அழித்து, உருத்தோற்றத்தையே மாற்றிக்காட்டக்கூடிய கடுநோய் ஒன்றிற்கு அவர் ஆட்பட்டிருந்தார் என்று தெரியவருகிறது. கடுநோய்ப்பிணியோடு, வறுமைப்பிணியும் அவரை வாட்டி வதைத்ததால், நலம் காணும் வழிகாணாது அவர் நீண்ட நாட்கள் துயருற்றார். அவரது புலமைத்திறனைக் கண்டு வியந்த மக்கள், அவரது துயரைப் போக்குவதிலே, சிறிது அக்கறை காட்ட முன்வந்தனர். அவர்களால் நோயைத் தீர்க்கவும் முடியவில்லை, அவரது வறுமையைப் போக்கவும் இயலவில்லை. இந்நிலையில் நரிவெரூஉத்தலையாரின் அருமை பெருமைகளை அறிந்த புலவர்களில் சிலர், அவரைக் காணவந்தனர். அவர்கள் ஒள்வாள் கோப்பெருஞ் சேரலிரும்பொறையினிடத்துச் சென்று, அவனால் போற்றப்பட்டு, அவனது பண்புகளையெல்லாம் கண்டறிந்துவந்தவராவார்கள். அவர்கள் நரிவெரூஉத்தலையாரின் நிலைமை கண்டு பெரிதும் வருந்தினார்கள். நரிவெரூஉத்தலையார் கோப்பெருஞ் சேரலிரும்பொறையினிடத்துச் செல்வாரேயானால், அவரது நோயும் நீங்கும், வறுமையும் தொலையும் என்று அவர்கள் எண்ணினார்கள். இரும்பொறை நோய்தீர்ப்பதில் எப்படி வல்லவனாக இருந்துவருகிறான் என்பதுபற்றியும், புலவர்களைப் போற்றுவதில் எவ்வளவு சிறந்தவனாக விளங்கிவருகிறான் என்பது பற்றியும் எடுத்துக் கூறி, அவனிடத்தில் விரைவாகப் போகும்படி, நரிவெரூத்தலையாரை வற்புறுத்தினார்கள். தம்மை அடிக்கடிக் காணும் ஒவ்வொருவரும், இரும்பொறையினிடத்துப் போகச்சொல்கிறார்களே என்பதை உணர்ந்த புலவர், சேரமன்னனைக்காண முடிவு செய்தார். ஒருநாள் புறப்பட்டுச் சேரமன்னனின் அரண்மனை நோக்கிச் சென்றார்.

சேரமன்னன் நரிவெரூஉத்தலையாரைப் பற்றி முன்னரே கேள்விப்பட்டிருந்தான். புலவரின் வருகை மன்னனுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. புலவரின் உருத்தோற்றம் அவனுக்குத் திகைப்பை அளித்தது. எப்படியேனும் அவரது நோயைப் போக்கித், துயர்களைதல் வேண்டும் என்று அவன் உறுதிபூண்டான். புலவரைத் தன்னோடு சிலநாட்கள் தங்கியிருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டான். மன்னனின் ஆர்வத்தையும், அன்பையும் கண்டு மகிழ்ந்து, புலவரும் அங்கேயே தங்கியிருக்க இசைந்தார். மன்னன் பலவிதமான மருத்துவமுறைகளையும் கையாண்டு புலவரின் நோயைத் தீர்க்க அரும்பாடுபட்டான். இறுதியில் அரசன் தன்முயற்சியில் வெற்றி கண்டான். புலவர் நோய்தீர்ந்து, இழந்த தம் பண்டைய நலத்தையெல்லாம் மீண்டும் பெற்றார். புலவர் ஒரு குறையும் இல்லாமல் மட்டற்ற

மகிழ்ச்சியோடு சேரனது அரண்மனையில் இருந்துவந்தார்.

ஒருநாள் மன்னனும் புலவரும் வெளியே உலாவச் சென்றார்கள். சேரனது நாடும், அந்த நாட்டை அடுத்து விளங்கும் காடும் எவ்வளவு அழகுடையனவாக இருக்கின்றன என்பதைப் புலவர் சிறப்பித்துக் கூறினார். அரசன் அதனைக் கேட்டு அகமகிழ்ந்தான். அக்காட்டினிடத்தே இருக்கும் சிறுசிறு குன்றுகள் எருமைகள்போலக் காணப்படுவதையும், பசுக்களின் கூட்டம்போல யானைகள் கூட்டம் கூட்டமாகத் திரிவதையும் புலவர் நயம்பட எடுத்துக்கூறினார்.

"அரசே! நீதான் பகைவர் யாராலும் அணுக முடியாத அளவுக்கு அமைந்துள்ள இயல்பான செல்வங்களை உடையவனாக இருக்கிறாயே! உனக்கு ஒரு குறையும் வராது" என்று புலவர் கூறினார்.

"புலவர் பெருமானே! தாங்கள் என்னோடு இருப்பதல்லவா எனக்குள்ள பெருஞ்செல்வம். தங்களைவிட எனக்கு வேறு பெருஞ்செல்வம் ஏது?" என்று அரசன் கூறுகிறான்.

"அரசே! நான் உனக்கு ஒரு தொல்லையாக இருக்கிறேனேயொழிய, உனக்குச் செல்வம் ஆகமாட்டேனே!"

"செல்வங்களிலெல்லாம் மிகப்பெரிய செல்வம் செவிச்செல்வம் என்றுதானே பெரியோர்களெல்லாம் சொல்லிவைத்துள்ளார்கள். அந்தச் செல்வத்தை எனக்கு ஓயாது ஒழியாது அளித்துக்கொண்டிருப்பவர்கள் தாங்கள்தானே! அப்படிப்பட்ட தங்களைவிட எனக்கு வேறு என்ன செல்வம் சிறந்த செல்வமாக இருக்கமுடியும்?"

"பொறையே! உனது பணிவு கண்டு உள்ளபடியே நான் மகிழ்கிறேன். நீ எனக்குச் செய்துள்ள நன்மையை நினைக்கும்போது, நான் உனக்குச் செய்வது கணக்கிற்கே வராதே!"

"நான் என்ன அப்படிப் பெரிய நன்மையைச் செய்துவிட்டேன்!"

"நோயால் தாக்குண்டு அழகு அழிந்துபோன என் உருத்தோற்றத்தை, நீதானே மாற்றிப் பழைய நலத்தை நான் அடையும்படி செய்தாய்! நான் ஒரு புதுப்பிறவியல்லவா எடுத்துள்ளேன்! என்னை நானே நம்பமுடியாத அளவுக்கு நலம் பெற்றுத் திகழ்கிறேனே! இவையெல்லாம் உன்னால் எனக்கு ஏற்பட்ட நன்மையல்லவா?"

"நான் எனது கடமையைத்தானே செய்தேன்!"

"நீ உனது கடமையைச் செய்தாய் என்றாலும், அதற்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்!"

அதுகேட்ட அரசன், சற்றுச் சிரித்த முகத்தோற்றத்துடன் "தாங்கள் எனக்குக் கைமாறு செய்யப்போகிறீர்களா? என்ன கைமாறு?" என்று கேட்டான்.

அதற்குப் புலவர் "நீ என்னிடத்திலுள்ளது என்னவேண்டுமானாலும் கேள், தரக்கடமைப் பட்டிருக்கிறேன்!" என்று புன்முறுவலோடு கூறினார்.

"எதைக் கேட்டாலும் தருவீர்களா?"

"ஓ! தருகிறேன், கேள்!"

"நான் கடைப்பிடித்தொழுக வேண்டிய அறிவுரை ஒன்றைத் தாருங்கள். அதுதான் நான் தங்களிடம் விரும்பும் கைமாறு" என்று அரசன் அன்போடு கேட்கிறான்.

அரசனின் பெருந்தன்மையையும், அவன் புலமையிடத்துக்கொண்டுள்ள பற்றையும் அறிந்துகொண்ட புலவர், தமக்குள்ளேயே அவனைப் பற்றி வியந்துகொண்டு, அவனிடம் சில கூற எண்ணினார். அன்பும் அருளும் அற்றவர்களாய்ச், செய்யக்கூடாத இழிசெயல்களை ஓயாமல் செய்துகொண்டிருப்பவர்களாய்த், தீமைப் படுகுழியில் போய் விழுபவர்களாய் உள்ள சிலர் அரசனை ஓயாது சுற்றி வருவதை புலவர் அவ்வப்போது கண்டறிந்தார். அரசன், அச்சிற்றின மக்களைத் தன்பால் நெருங்கவிடக் கூடாது என்பது புலவரின் எண்ணம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அரசனுக்கு அதுபற்றிய அறிவுரை கூற முற்பட்டார். அது வருமாறு:

"அரச பெருந்தகையே! அன்பையும் அருளையும் அறவே நீக்கிவிட்டு, இழிச்செயலையும் பழிச்செயலையும் செய்து, தீமைப்படுகுழியில் கிடந்து உழலும் சிற்றின மக்களோடு நீ ஒரு சிறிதும் தொடர்பு கொள்ளலாகாது. நீ காத்து

வரும் நாட்டைக், குழந்தையை வளர்ப்பவர்களைப் போலப் பாதுகாப்பாயாக! உன்னுடைய நாடு உன்னால் மிகவும் அளிக்கத்தக்கதாகும். உன்னுடைய நாடு பெறுவதற்கரிய சிறந்தவொரு நாடாகும். எனவே அதனைக் குழந்தையைப்போல் பாதுகாப்பாயாக!"

புலவரின் மொழி அரசனுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகவும், நல்ல அறிவுரை புகட்டுவதாகவும் அமைந்தது. பிறகு இருவரும் மகிழ்ச்சியோடு அரண்மனை ஏகினர்.

ஃ ஃ ஃ

இது புறநானூற்றின் ஐந்தாவது பாடலின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்டதாகும். நரிவெரூஉத்தலையாரின் மெய் வேறுபாடு, கோப்பெருஞ்சேரலிரும்பொறையினைக் கண்ட அளவிலேயே நீங்கிப் பண்டைய நலத்தை அடைந்தது என்று கூறுவோரின் கூற்று இயற்கைக்கு மாறுபட்டுக் காணப்படுகின்ற காரணத்தால், இரும்பொறையின் மருத்துவ முயற்சியிலேயே நரிவெரூஉத்தலையார் நலம் எய்தினார் என்று கொள்ளுவது தவறாகாது. அக்காலத்தரசர்கள் புலவரின் அறிவுரையினிடத்து எவ்வளவு மதிப்பு வைத்திருந்தனர் என்பதும், அரசரின் தவற்றைச் சுட்டிக்காட்ட புலவர்கள் சிறிதும் தயங்கினதில்லை என்பதும் இச்செய்யுளால் இனிது உணரலாகும். இரும்பொறை உருவழகு கொடுத்த உரவோன் ஆயினன் என்பது செய்யுளின் அடிக்குறிப்பில் காணப்படும் செய்தியாகும்.

ஃ ஃ ஃ

எருமை யன்ன கருங்கல் இடைதோறு
ஆறிற் பரக்கும் யானைய முன்பின்
கானக நாடனை நீயோ பெரும
நீயோ ராகலின் நின்னொன்று மொழிவல்
அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவரோ(டு) ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானே அது பெறல் அருங் குரைத்தே

[புறம்—5]

சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும்பொறையைக் கண்ட ஞான்று நின்னுடம்பு பெறுவாயாகென, அவனைச் சென்று கண்டு தம்முடம்பு பெற்றுநின்ற நரிவெரூஉத்தலையார் பாடியது.

[ஆனில் - பசக்கூட்டத்தைப்போல ; யானைய - யானையை உடையது ; முன்பின் - வலிமையையுடைய ; கானக நாடனை - காட்டிற்குள்ளாக உள்ள நாட்டினை உடையாய் ; மொழிவல் - சொல்லுவேன் ; நிரயம் - தீமைப்படுகுழி ; அதாவது நரகம் ; ஒன்றாது - பொருந்தாது ; காவல் - காக்கப்படும் நாட்டை ; குழவி – குழந்தை ; ஓம்புமதி - பாதுகாப்பாயாக ; அளிது அது - அளிக்கத்தக்கதொன்று அக்காவல் ; பெறல் அருங்குரைத்து – அது பெறுதற்கரியது,]



மூக்குக் கண்ணாடி

என்னுடைய கதையை உங்களிடத்தில் சொல்லவேண்டும் என்பது எனது நீண்ட நாளைய ஆவல். அதற்கு ஓய்வே ஒருசிறிதும் கிடைக்கவில்லை. இன்றுதான் சிறிது ஒழிவு ஏற்பட்டது. நீங்களும் ஓய்வாக இருப்பதைப் பார்த்துச், சிறிது நேரம் பேசி மகிழ்ந்திருக்கலாமே என்று வந்தேன்.

என்னைப்பற்றி நீங்கள் இதற்குமுன் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று கருதுகிறேன். என்னுடைய கதையே வேடிக்கையானதுதான். நான் முதன்முதல் ஐரோப்பாக் கண்டத்தில்தான் தோன்றினேன். நான் பிறந்து ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகள்தாம் ஆகின்றன. நான் பிறந்தவுடன் ஐரோப்பிய நாடுகளில்தான் முதலில் உலாவத்தொடங்கினேன். மக்களிடத்தில் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. மக்களுக்கு வயது ஏற ஏற அவர்களது கண்கள் பார்வையிழந்து மங்க, மக்கள் கால்குருடர், அரைக்குருடர், முக்கால்குருடர், முழுக்குருடர்களாக மாறுவதைக் கண்டேன். உடலுறுப்புகளிலே மிகச் சிறந்த உறுப்பாகிய கண் மங்கிவிடுவதால், மக்கள் அளவிடற்கரிய வேதனைக்கு உள்ளாக வேண்டி இருப்பதைக் கண்டு, நான் மனம் வருந்தினேன்; மக்கள்பால் இரக்கங்கொண்டேன். பல்வேறு வகையினும் தொல்லையுறும் மக்கட் சமுதாயத்தை, ஏதேனும் ஒருவகையில் ஈடேற்றுவதை, நமது கடமையாகக்கொள்ள வேண்டும் என்ற கருத்து என் உள்ளத்தை எப்பொழுதும் ஆட்டிப்படைத்துக்கொண்டேயிருந்தது. கண் பழுதுபட்டோரைக் கண் பார்வையுடையவராகச் செய்வதை நமது வாழ்க்கையின் குறிக்கோளாக வைத்துக்கொள்வது என்ற முடிவுக்கு வந்தேன். மனித சமுதாயம் இழந்த பார்வையைக், கூடுமானவரையில் மீட்டுக்கொடுப்பதே பெரும் பணி, என்கடன் அப்பணி செய்துகிடப்பதே என்ற துணிவுடன் பணியாற்றத்தொடங்கினேன். மக்கள் எந்த அளவுக்குப் பார்வை யிழந்து தவிக்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களுக்குப் பார்வை யூட்டிப் பொருள்களைத் தெளிவுபடுத்திக் காட்டும் வழிகாட்டியானேன். சிறிதேனும் பார்வையுடையவர்களைத்தான் என்னால் முழுப் பார்வையாளராக ஆக்கிக்காட்ட முடிந்ததேயல்லாமல், முழுக்குருடர்களைப் பார்வையாளராக ஆக்க என்னால் முடியவில்லை.

கற்றறிந்த முதியவர்கள்தாம் என்னுடைய உதவியை முதன்முதல் நாடினார்கள். நான் அவர்களுக்கு மிகவும் பயன்படுவதைக்கண்டு; என்னை அவர்கள் மிகவாகப் பாராட்டினார்கள். சமுதாய சீர்திருத்தத்தில் இறங்குகிற ஒவ்வொருவருக்கும் ஆரம்பநிலையில் எதிர்ப்புகள் ஏற்படுவதைப் போல எனக்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. நான் பொருள்களைப் பெரிதாக்கிக் காட்டுவதால், நான் ஒரு பேயாகவோ, பூதமாகவோ, பிசாசாகவோதான் இருக்கவேண்டும் என்ற கருத்தைக் கோயில் பாதிரிமார்கள் மக்களிடையே பரவவிட்டார்கள். அது காரணமாக நான் சில இடங்களில் அடித்துத் தூக்கப்பட்டேன்; காலால் மிதிக்கப்பட்டு உடைக்கப்பட்டேன். என்னுடன் நட்புறவுகொண்டாடிக் கொண்டிருந்த சில பெரியவர்கள்கூட அடித்து உதைக்கப்பட்டார்கள். ஆனால் எனக்கு ஏற்பட்ட எதிர்ப்பு நீண்டநாட்களாக நிலைக்கவில்லை. விரைவிலேயே அடங்கிவிட்டது. ஏனென்றால், என்னால் ஏற்படக்கூடிய நன்மைகளை எதிரிகளும் ஓரளவுக்கு உணரத்தலைப்பட்டார்கள். அவர்களே என்னுடைய உதவியை நாடவேண்டிய இன்றியமையாத நிலையும் ஏற்பட்டது. வயதேறி, கண் பழுதுபட்ட சில பாதிரிமார்கள் என்னுடைய உதவியைக் கொண்டு, தாங்கள் பார்க்கமுடியாமல் கிடந்த வேதபுத்தகத்தைப் பார்த்துப் படிக்கலாம் என்பதைக் கண்டுகொண்டார்கள். நாளடைவில் அவர்கள் என்மீது கொண்டிருந்த வெறுப்பை அறவே ஒதுக்கிவிட்டு, என்னோடு நெருங்கிய நட்புறவுகொள்ள ஆரம்பித்தார்கள். கற்றறிந்த பெரியோர்களும், கோயில் பாதிரிமார்களும் மட்டுமே என்னைப் பயன்படுத்தி வந்ததால், அறிவு, உயர்வு, புனிதத்தன்மை, பெருந்தன்மை ஆகிய தன்மைகள் எனக்குத் தொடர்பு படுத்திக் கூறப்பட்டன. எனக்கு மதிப்பும்,

மரியாதையும், பெயரும், புகழும் எங்கணும் ஏற்பட்டன.

மிகச் சாதாரணமான முறையில், தொல்லைகள் பல ஏற்றுச், சிறிதுசிறிதாக முன்னேறி வந்த என்னை, இக்காலத்தில், உலகெங்கும், விதவிதமான முறையில் அழகுபடுத்திப் பார்க்கிறார்கள்; எனக்குப் பலவிதமான வண்ணங்களையும் தடவுகிறார்கள்; தங்கத்தாலும், வெள்ளியாலும், தந்தத்தாலும் எனக்கு அணி செய்கிறார்கள்.

கண்பார்வைக்குத் தெளிவு பயக்க என்பதற்காகத் தோன்றிய என்னை. இக்காலத்தில் வேறு என்னவென்னத்திற்கெல்லாமோ பயன்படுத்துகிறார்கள். மக்கள் தங்கள் தலைவலியைப் போக்கிக்கொள்வதற்காகவும், வெய்யலின் கொடுமையைத் தடுத்துக்கொள்வதற்காகவும், பொட்டைக்கண்ணை மறைத்துக்கொள்வதற்காகவும், தங்களை அழகுபடுத்திக் கொள்வதற்காகவும் என்னைப் பெரும்வகையில் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். இளம் ஆண்பெண்களின் அவசியத்திற்காக அல்லாமல், அவர்களை அழகுபடுத்துவதற்காகவே நான் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுவருகிறேன். கண்களில் தூசி, புழுதி படாமல் அவற்றைத் தடுத்து நிறுத்தும் காவலாளியாகவும் நான் நியமிக்கப் படுவதுண்டு. இக்காலத்தில் முவ்வளவு பேசும் படங்களைப் பார்க்க, மக்களுக்கு எனது உதவி மிகவும் தேவைப்படுகிறது.

நான், பிளாரன்டைன் நகரைச் சேர்ந்த ஒருவரால், பதின்மூன்றாம் நூற்றாண்டில் பெற்றெடுக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். ரோஜர் பேக்கன் என்ற அறிவியல் அறிஞன் தான் என்னைப் பெற்றெடுத்த தந்தை என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

நான் பிறந்தபோது, சுற்றிலும் உலோகத்தால் ஆன வரம்பு கட்டப்பட்டுச், சிறுகைப் பிடியோடு கூடிய, கண்ணாடியினால் ஆன வட்ட வில்லையாகக் காணப்பட்டேன். அதே தோற்றத்தோடு கூடிய, ஆனால் அழகுபடுத்தப்பட்ட நான் 'மாட்டுக்கண் வடிவம்போன்ற பூதக்கண்ணாடி' (Bull's eye lens) என்ற பெயரால் இப்பொழுதும் சிலர் கைகளில் மிளிர்வதைக் காணலாம். அந்தக்காலங்களில் ஒரு கண்ணை மூடிக்கொண்டு, மற்றொரு கண்ணுக்குமுனனால் என்னை நேராகப் பிடித்துக்கொண்டு, புத்தகங்களைப் படித்தார்கள்; நுண்ணிய பொருள்களைக் கண்டார்கள். ஐரோப்பாக் கண்டத்தில் இடைக்காலங்களில் வாழ்ந்த மேட்டுக்குடியினரும், மேலான மக்களும் என்னை ஒரு கயிற்றில் கட்டிக் கழுத்தில் தொங்கப்போட்டுக்கொண்டு, அவசியமானபொழுது கண்ணுக்கு எதிரே தூக்கிப்பிடித்துக்கொள்வதை ஒரு நாகரிகச் செயலாகவே கருதிவந்தனர்.

பிறகு என்னுடைய தோற்றத்திலே சிறிது மாறுதல் செய்தனர். கைப்பிடிகளோடு கூடிய இரண்டு கண்ணாடி வில்லைகளை எடுத்து, அவற்றின் கைப்பிடிகளை ஒன்றோடொன்று பொருத்துவதன்மூலம், இரண்டு கண்களும் சேர்த்துப் பார்க்கும்படியான மாதிரியில் என்னை உருவாக்கினார்கள். அப்படி உருவாக்கிய என்னை எப்படி கண்களுக்கு எதிரே நிறுத்துவது என்பது கடினமானதொரு செயலாகக் காணப்பட்டது. அதற்காகக் கிடுக்கி ஒன்று செய்து, இரண்டு கண்ணாடி வில்லைகளுக்கிடையிலே கைப்பிடிகள் பொருத்தப்பட்ட இடத்தில் அதனைப் பொருத்தினார்கள். அந்தக் கிடுக்கியை விலக்கி மூக்கின் சதைப் பிடிப்பான பகுதியில் அதனை மாட்டி விட்டால், அது மூக்கை அழுத்திப் பிடித்துக் கொள்வதாக அமைந்திருந்தது. இந்த நிலையில் நான் இரண்டு கண்களுக்கு நேராக நிற்க வேண்டி ஏற்பட்டது. இப்படி என்னைப் பயன்படுத்தினவர்கள் மூக்கினால் மூச்சுவிட முடியாமல் வாயினால் விடவேண்டியவர்களாக இருந்து வந்தார்கள். தும்மும்போதும், பெருமூச்சு விடும்போதும் நான் என் நிலையில் நிற்கமுடியாமல் கழன்றுபோய் அப்பால் விழவேண்டியவனாக இருந்தேன். எனக்கு ஆபத்து எப்பொழுதும் தலைமேல் காத்துக்கொண்டிருந்தது. இந்த முறையில் ஏறத்தாழ பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் பல அவதிகளுக்கிடையே வாழ்ந்து வந்தேன்.

இடைக்காலத்தில் டச்சு ஓவியர்கள் வரைந்த பல படங்களிலும் நான் இந்த முறையிலேயே வரையப்பட்டிருப்பதை நீங்கள் கண்டிருக்கலாம். மூக்கு சப்பையாகி, வாய்திறந்த நிலையில் என்னை மாட்டிக்கொண்டு படத்தில் காணப்படுபவர்கள், அழகற்ற தோற்றம் அளிப்பவர்களாகவே இருந்துவருகிறார்கள்.

அடிக்கடி நான் கீழே விழாமல், என்னைப் பாதுகாக்கவேண்டி சிலர் தொப்பி அணிந்து

கொண்டு, அந்தத் தொப்பியில் என்னைக் கட்டித் தொங்கவிட்டு, அவர்களின் கண்களுக்கு எதிரே நான் நிற்கும்படி பார்த்துக்கொண்டார்கள். ஸ்பெயின் நாட்டை ஆண்ட இரண்டாவது பிலிப் மன்னன், ஒரு மரச்சட்டத்தில் இரண்டு கண்ணாடி வில்லைகளைப் பொருத்துவதன்மூலம் என்னை உருவாக்கி, அவனுடைய தொப்பியில் என்னைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருந்தான். சவனரோலா என்ற பேர் பெற்ற அறிஞர், நான் அடிக்கடிக் கீழே விழுந்துவிடுவதைத் தடுக்கவேண்டி, தலையில் ஒரு குல்லாய் அணிந்துகொண்டு, அதில் என்னைக் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டிருந்தார்.

பிறகு எனது இரண்டுபக்கத்திலும் இரண்டு கயிறுகளைக் கட்டி, அவற்றைத் தலைக்குப் பின்னால் முடிபோடுவதன் மூலம் என்னைக் கண்களுக்குநேரே நிறுத்தும் பழக்கம் ஒன்று ஏற்பட்டது. சிலபொழுது கயிறுகளைப் பின்னால் இழுத்து முடிபோடாமல், தங்கள் காதுகளில் சுற்றிக்கொள்வதன்மூலம் என்னை முகத்தில் நிற்கும்படி செய்தார்கள்.

சில நாட்களுக்குப் பின்னர், எனது இரண்டு பக்கத்திலும் இரண்டு தகடுகளைப் பொருத்தி, அவை அணிந்துகொள்பவரின் நெற்றியின் இரண்டு பக்கங்களையும் அழுத்திப் பிடித்துக் கொள்ளுகிற மாதிரியில், நான் பயன்படுத்தப்பட்டேன். இந்த முறையில் உருவாக்கப்பட்ட என்னை வியாபாரிகள் விளம்பரம் செய்யும்போது, அணிந்துகொள்பவர் மூச்சு விடுதலை நான் எந்தவகையிலும் தடுக்கமாட்டேன் என்ற முறையில் விளம்பரம் செய்தார்கள். கி. பி. பதினெட்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான், லண்டனிலுள்ள கண்ணாடி வியாபாரி ஒருவன், என்னை மேற்கண்ட முறையில் உருவாக்கி உலகிற்கு அறிமுகப்படுத்தினான்.

பிறகு நாளடைவில் நல்லபாம்பின் படத்தில் உள்ளதைப்போல் நான் உருவாக்கப்பட்டு, எனது இரண்டு பக்கத்திலும் இரண்டு கம்பிகள் பொருத்தப்பட்டு, அவைகள் இரண்டு பக்கக் காதுகளிலும் சென்று மாட்டிக்கொள்வதுபோலவும், நான் மூக்கின்மேல் நின்றுகொள்வதுபோலவும் நிலைமை ஏற்பட்டது. அந்த நிலையில்தான் இப்பொழுது நான் வாழ்ந்துவருகிறேன்.

என்னை ஐரோப்பிய பாதிரிமார்கள்தாம் முதன்முதல் இந்தியத் துணைக்கண்டத்திற்கு அழைத்துவந்தார்கள். நான் பதினாறாவது நூற்றாண்டிலேயே இந்தியாவுக்கு வந்துவிட்டேன் என்றாலும், பதினேழு, பதினெட்டாவது நூற்றாண்டுகளில்தான் என்னுடைய புகழ் எங்கும் பரவிற்று.

உலகெங்கும் என்னை அழைக்கும்போது, கண்ணோடு தொடர்பு படுத்தித்தான் அழைக்கிறார்கள். ஆனால் நான் தமிழ்நாட்டிற்கு வந்ததற்குப் பிறகு, எனக்குத் தமிழ்நாட்டார் வேடிக்கையான பெயரிட்டு அழைத்துவருகிறார்கள், என்னைக் கண்ணோடு தொடர்புபடுத்தாமல் மூக்கோடு தொடர்பு படுத்தி மூக்குக்கண்ணாடி என்று அழைத்துவருகிறார்கள். நான் மூக்கின்மேல் நிற்கிறேன் என்பதைத்தவிர, எனக்கும் மூக்குக்கும் வேறு தொடர்பு ஏதும் கிடையாது; நான் பயன்படுவதெல்லாம் கண்ணுக்குத்தான். அப்படியிருந்தும் என்னை 'மூக்குக் கண்ணாடி' என்றுதான் அழைக்கிறார்கள். தமிழ்நாட்டார் என்னைக் கேலிசெய்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். நானும் அது பற்றி அக்கரைகொள்ளாமல், சிரித்துக் கொண்டே அந்தப் பெயரை ஏற்றுக்கொண்டு தான் வாழ்ந்துவருகிறேன்.

இடைக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் எனக்குப் பேரும் புகழும் ஏற்பட்டவுடனே, ஓவியர்களெல்லாம், ஓவியம் வரையும்போது அதில் வருபவர்களுக்கெல்லாம் என்னை மாட்டிவிட்டு அழகு பார்த்தார்கள். தேவதைகளையும், தேவதூதர்களையும், அவதாரங்களையும் வரையும்போது, என்னை அவர்களுக்கெல்லாம் மாட்டிவிட்டு அழகுபார்த்தார்கள்.

பிரிட்டிஷ் கண்காட்சி சாலையிலுள்ள புத்தகம் ஒன்றில், அன்னை மேரிக்கு அருகில் நின்றுகொண்டு, புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கும் இரண்டு அடியோர்கள் என்னை மாட்டிக்கொண்டிருப்பதாக படம் போடப்பட்டிருக்கிறது. பவேரியா மாதாகோயிலிலுள்ள படம் ஒன்றில், செயின்ட் பீட்டர் தம் கண்ணுக்கு எதிரே என்னை ஏந்திக்கொண்டு பார்ப்பதுபோல வரைந்திருக்கிறார்கள். இப்படியாக நான் தோன்றாத காலத்தில்கூட, நான் இருந்ததாகவே மதித்து ஓவியர்கள் படங்கள் தீட்டினார்கள்; சிற்பிகள் பதுமைகள் செதுக்கினார்கள்.

ஏதோ என்னுடைய கடமையை என்னால் முடிந்தவரையில், நான் செய்துகொண்டிருக்

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண் சங்கு சியக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் - ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

உரிமையாளர்: S. பெத்தண்ணா நாடார்

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

கிறேன். என்னுடைய பெயரும் புகழும் நாளுக்குநாள் மேலோங்கி வருவதிலே எனக்கு மிக்க மகிழ்ச்சிதான். சிறுவர்களும் பெரியவர்களும், ஆடவரும் பெண்டிரும், கண்ணுடையோரும் கண் பழுதுபட்டோரும் என்னை விரும்பி என்னுடன் நட்புறவுகொள்ள நாளுக்குநாள் பெருகிவருகிறார்கள் என்பதை எண்ணும்போது என்னை அறியாமலேயே எனக்குப் பெருமகிழ்ச்சி தோன்றுகிறது.

நேரமாகிவிட்டது. நான் பேசிக்கொண்டே இருந்தால் இன்னமும் எவ்வளவோ சொல்லிக்கொண்டே யிருப்பேன். அதனால் உங்களுடைய வேலையும் கெடும்; என்னுடையவேலையும்கெடும். என்னுடைய முதலாளி இதற்குள் என்னைத் தேடிக்கொண்டிருப்பார். நான் போய் வருகிறேன். பிறிதொருபொழுது பார்க்கலாம்!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0— 5—0

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.

எழுதியவை

கண்ணீரும் செந்நீரும்

வளர்ந்த கழகம்	0—12—0
மறைந்த திராவிடம்	0— 3—0

இரா. செழியன் M. A.

எழுதியவை

ராஜாதி ராஜா	0—12—0
பொது அறிவு	0— 8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது.

விபரங்கட்கு:

நிர்வாகி, மன்றம் பதிப்பகம்,

26, நைனியப்பன் தெரு,

மண்ணடி :: சென்னை-1.

அண்டசராசரம்-5

அக்கிரஹாரம் ரீண்டைமின் இடு

[இரா. செழியன்]

[இந்து மதத்தின் வேத, புராணங்களின்படி, அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தான். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக அஸ்திவாரமாக ஒரு ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்டதிக்கு யானைகளும், ஆயிரந்தலை ஆதிசேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல் ருத்ரர்கள் வசிக்கும் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ரபுவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமபட்டணங்களும், அதையடுத்து 28 கோடி நரகங்களும் நிற்கின்றன. நரகலோகத்தின்மேல் கூஷ்மாண்டபுவனம் அதற்குமேல் ஏழு பாதாளங்கள், அதையடுத்து ஆடகேசுரபுவனம்; அதையும் கடந்தால் பூலோகம். பூலோகத்திற்கு உயரே புவலோகம் ஆரம்பிக்கிறது. புவலோகத்தில் மேகமண்டலங்களும், வீரசுவர்க்கமும், காந்தருவர் வித்தியாதரர்களும், கருடன், ஐராவதம் போன்றவைகளும் உள்ளன. புவலோகத்துக்கு மேல் சூரியலோகம். சூரியலோகத்துக்கு அப்பால் சந்திரலோகம்......]

சந்திரலோகம்

சூரியமண்டலத்துக்கு இரண்டுகோடி மைல்களுக்குமேல் சந்திரமண்டலம் ஆரம்பிப்பதாகப் புராணம் கூறுகிறது. உண்மையில் பூமிக்கு மிக அருகாமையில் இருப்பது சந்திரனும். பூமிக்கும் சந்திரகோளத்துக்கும் உள்ள தூரம் 2 லட்சத்து 30 ஆயிரம் மைல், பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரம் 9 கோடி 30 லட்சம் மைல். ஆனால் புராண "அளப்பில்" தூரங்கள் தலைகீழாக மாறிவிடுகின்றன. பூலோகத்திலிருந்து சூரியலோகம் ஒரு கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கிறது, சந்திரலோகம் மூன்று கோடிகளுக்கு அப்பால் இருக்கிறது! கற்பனையளவுகளில் தூரமும், இடமும் எவ்வித கவலையுமின்றி தரப்பட்டிருக்கின்றன.

இனிப் புராணங்களில் வருகிற சந்திரலோகத்தைப் பார்க்கலாம். சந்திரலோகம் 32 லட்சம் மைல் நீள அகலமுடையதாம். இவனுடைய தேருக்கு மூன்று சக்கரங்கள் உள்ளன. அந்தத் தேரில் 10 குதிரைகள் பூட்டப்பட்டுள்ளன. சந்திரலோகத்தில் பிதுர் தேவர்களும், விச்வ தேவர்கள் என்பாரும் குடியிருக்கின்றனர்.

சந்திரனுடைய பிறப்பு வளர்ப்பைப்பற்றி, புராணத்துக்குப் புராணம் மாறுகிறது. சிவ புராணங்களில் சந்திரன் சிவமூர்த்தியின் அஷ்ட மூர்த்தங்களில் ஒன்று என்று கூறப்படுகிறது.

விஷ்ணு புராணங்களில், சந்திரன் திருமாலின் மார்பில் பிறந்தவன் என்று எழுதப்பட்டிருக்கிறது.

திருப்பாற்கடல்கடையும்பொழுது சந்திரன் பிறந்தான் என்று ஒரு புராணக்கதை கூறுகிறது. ஆனால் மற்றொரு புராணத்தில், திருப்பாற்கடல் கடையும்பொழுது மத்தாக இருந்தது சந்திரன் என்று கூறுகிறது.

காசிகாண்டம் என்ற புராணம் வேறொரு விதமான கதையை வரைகிறது. பிரமனுடைய கண்ணில் பிறந்த அத்திரி என்பவர் காட்டில் தவஞ்செய்துகொண்டிருந்தாராம். அவருக்குப் பணிவிடைசெய்ய, அவருடைய மனைவி அநுசூயை என்பவளும் சென்றிருந்தாளாம்.

அநுசூயை மிக அதிரூப சுந்தரவதியென்று புராணம் கூறுகிறது. அவளுடைய அழகு கண்டு மயங்காதார் யாரும் இருந்திருக்க முடியாது. அவளுடைய பேரழகு கேள்விப்பட்டு, மும்மூர்த்திகளே அவளைப் பார்க்கச் சென்றார்களாம். பார்ப்பது என்றால் சாதாரணமாக அல்ல, அநுசூயை நிர்வாணக்கோலத்தில் பார்க்கவேண்டுமென்று மும்மூர்த்திகள் சென்றார்களாம். அந்த மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக்கி, நிர்வாணக் கோலத்துடன் அநுசூயை

காட்சி தந்தாள் என்று வேறொரு புராணக் கதை கூறுகிறது. அது எப்படியோபோக, மும்மூர்த்திகளே காணவிரும்பிய அழகுடைய வளாக அநுசூயை இருந்தாள்.

அத்தகைய அழகுடைய அநுசூயையை அழைத்துக்கொண்டு காட்டிற்குச் சென்றார் அத்திரிமுனிவர்! அவர் செய்யவிரும்பியதோ, புலன்களனைத்தையும் அடக்கிச் செய்யவேண்டிய அகோரத் தவம்! அருகிலிருப்பதோ அழகு நங்கை அநுசூயை! யாககுண்டத்திலிருந்து கிளம்பும் புகை அவர் கண்ணை மறைத்தாலும், கருத்திலிருந்து அநுசூயை மறைய மறுத்தாள்! வேத வேதாந்தங்களை விசாரணை செய்யவேண்டிய சமயத்தில், அநுசூயையின் கவனம் வந்து விடும். உடனே அவளை அழைத்து விசாரணை செய்ய ஆரம்பித்துவிடுவார்! முக்கண்ணனை நினைத்து தியானம் செய்யும்பொழுது, திடீரென்று அநுசூயையின் கருங்கயற் கண்கள் ஞாபகத்துக்கு வந்துவிடும்! அலைகடலில் துயில்கொள்ளும் திருமார்பனை நினைக்கும் பொழுது, பக்கத்தில் தழை மெத்தையில் துயில் கொள்பவளின் அழகிய மார்பே கவனத்துக்கு வந்தது! என்ன செய்வார், பாவம் அத்திரிமுனிவர்! தவத்தைச் சரியாகச் செய்யவும் முடியவில்லை, தாரத்துடன் உல்லாசமாக வாழவும் துணிவு அவருக்கில்லை. கையிலே தர்ப்பையைப் பிடித்து, கருத்திலே பெரும் தீயை மூட்டிக்கொண்டு, அத்திரிமுனிவர் தவ வேலையைச் செய்துகொண்டிருந்தார்!

ஒருநாள் அத்திரி முனிவர் மரத்தடியில் அமர்ந்து யோகத்தில் ஆழ்ந்திருந்தார். திடீரென்று கண்விழித்துப்பார்த்தபொழுது அவரே திடுக்கிட்டுவிட்டார்! சுனையிலே நீராடி, அநுசூயை நனைந்த ஆடை இறுகிய உடலுடன் வந்துகொண்டிருந்தாள்! அவரோ புலன்களை வெல்லவந்த முனிபுங்கவர், வந்தவளோ அவருடைய தர்மபத்தினி! தூரத்திலே அவளைப் பார்த்ததுமே இவருடைய ஐந்து புலன்களும் அடங்கிவிட்டன காமக்கிளர்ச்சியில். பறித்தெடுக்கும் பார்வையுடன் தன் மனைவியைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். காமம் அதிகமாகி, தலைக்கேறி, கண்வழியே வழிந்ததாம்! உடனே பிரமதேவன் அங்கு தோன்றி, அத்திரியின் கண்ணிலிருந்து வழிந்த காமத்தை எடுத்து வானத்தில் வீசினாராம். அது சந்திரனாயிற்றாம். வெள்ளிய சந்திரன் உண்டான தற்குப்புராணங்கள் கூறும்கதை இது. கற்பனைகள் தோன்றுவது இயல்பு. ஆனால் இதைப் போன்ற ஆபாசக்கதைகள் நமது இந்துமதப் புராணங்களைத் தவிர வேறெங்கும் இவ்வளவு அதிகமாகக் காணமுடியாது.

பிரமனின் கண்ணில் அத்திரி பிறந்தான், அத்திரியின் கண்ணிலிருந்து சந்திரன் உண்டானான் இவ்வாறு புராணம் எழுதிவைத்திருக்கிறது.

சந்திரன் வளர்வதும், தேய்வதுமாக உள்ளதற்கும் புராணத்தில் கதையிருக்கிறது.

தக்கன் என்பவனுடைய இருபத்தேழு குமாரிகளைச் சந்திரன் மணந்திருந்தான். இந்த இருபத்தேழு குமாரிகளை இருபத்தேழு நட்சத்திரங்களாக இருப்பவர்கள். இந்த இருபத்தேழு மனைவிகளையும் சமமாக நடத்தாமல், அவர்களில் கார்த்திகை, ரோகினி ஆகிய இருவரிடத்துமட்டும் சந்திரன் தனியான ஆசை காட்டினானும். இதைக்கண்ட மற்ற பெண்கள் தங்கள் தந்தையிடம் முறையிட, மாமனரான தக்கன் சந்திரனின் உருவம் நாள்தோறும் தேயும்படி சாபமிட்டானும். இந்தத் தண்டனையை எதிர்த்துச் சந்திரன், சிவபெருமானுக்கு 'அப்பீல்'செய்துகொண்டான். தேய்ந்து வருவதுபோலவே, நாள்தோறும் மீண்டும் வளர்ந்துவிடுமாறு சிவனார் அருளினாராம். இதனால்தான் சந்திரன் தேய்வதும், வளர்வதுமாக இருப்பதாகப் புராணம் கூறுகிறது.

சந்திரன் கல்வி கற்றது பிரகஸ்பதி என்ற தேவகுருவிடம். அந்த இடத்தில் குருபத்தினி தாரைக் கலவிக் கலையைக் கற்றுக்கொடுத்த கதை பலருக்குத் தெரிந்ததாகும்.

சந்திரலோகத்தில் சந்திரன் இருக்கிறான், அதே சமயத்தில் சிவபெருமானுடைய முடி மீதும் இருக்கிறான். அதுமட்டுமல்ல, சிவனுடைய கண்களில் ஒன்றாகவும் இருக்கிறானும்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களையுடைய சந்திரன், முன்பு குறிப்பிட்ட சூரியலோகத்திற்குமேல் இரண்டுகோடி மைலுக்கப்பால் இருக்கிறான்.

நட்சத்திர மண்டலம்

சந்திரலோகத்துக்கு ஒருகோடி மைலுக்கு மேல் நட்சத்திரமண்டலம் பரவியிருக்கிறது.

தக்கன் என்பவன் பிரமபுத்திரர்களில் ஒருவன். இவன் பிரமனுடைய கட்டை விரலில் பிறந்தான். இவனுக்கு தரணி, அசக்நி என்ற இரு பெண்களை மணந்தான். இந்த இரு பெண்களும் யாரென்றால், பிரமனுடைய குமாரிகள் என்று புராணம் வேறொரு இடத்தில் கூறுகிறது. ஆக தனக்குத் தங்கைமுறையாகும் இரு பெண்களை தக்கன் மணந்துகொண்டான். (என்ன அநியாயம், தருமா? முறையா? என்று கேட்பீர்கள். மேலுலகத்தில் உள்ள தேவர் மூவர்கள் இந்த முறைகளைப்பற்றி அதிகமாகக் கவலைப்படுவதில்லை தங்கையைத் தாரமாக்கிக் கொள்வது, மகளை மஞ்சத்திலமர்த்திக்கொள்வது இவையெல்லாம் அங்கு சாதாரண சம்பவங்கள்). தக்கனுக்கு தரணி என்ற மனைவியிடம் 1000 குமாரர்கள் பிறந்தார்கள். அசக்நி என்ற இரண்டாவது மனைவியிடம் 90 பெண்கள் பிறந்தார்களாம். அவர்களில் மற்றவர்களுக்கு மணமாகிவிட, 27 குமாரிகள் மட்டும் தங்கிவிட்டனர். தக்க புருஷன் வேண்டுமென்று, இந்த 27 பெண்களும் புருஷாயதம் என்ற யாகத்தைச் செய்தார்களாம். அந்த யாகத்தின் பலனாய், அவர்களுக்குச் சந்திரன் கணவனாகக் கிடைத்ததுடன், நட்சத்திரங்களாகவும் ஆகிவிட்டனர். இந்தக் கதைப்படி நட்சத்திரங்களெல்லாம் பெண்கள்.

ஆனால் மற்றொரு கதைப்படி, நட்சத்திரங்கள், ஆண் நட்சத்திரங்கள், பெண் நட்சத்திரங்கள், அலி நட்சத்திரங்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

நட்சத்திரப்பதம் என்பது, முனிபுங்கவர்களும், தவசிரேஷ்டர்களும் தங்களுடைய தவ வலிமையால் அடையும் பதவியாகும். நட்சத்திரமண்டலத்தில், சத்த இருடிகள், மின்னல், தூமகேதுக்கள், கணதேவர்கள் முதலியவர்கள் இருக்கின்றனர்.

செவ்வாய்

நட்சத்திர மண்டலத்துக்கு இரண்டுகோடி மைல்களுக்குமேல் செவ்வாய் இருப்பதாகப் புராணம் கூறுகிறது.

சிவபெருமான் யோகத்திலிருந்த சமயத்தில், அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து வியர்வையுண்டாகி பூமியில் விழ, அது குழந்தை வடிவாகிவிட்டதாம், அதைப் பூமிதேவி யெடுத்து வளர்த்தாள். பின் தவம் செய்து, கிரகங்களில் ஒன்றாகச் செவ்வாய் ஆனான்.

செவ்வாயின் பிறப்புக்கு மற்றொருவிதப் புராணக்கதையும் இருக்கிறது. பாரத்துவாசர் என்ற ரிஷி சிரேஷ்டர் ஒருநாள் நீராடப் போய்க்கொண்டிருந்தாராம். அப்பொழுது, ஆற்றில் நீராடிக் கரையேறி, நனைந்த ஆடையுடன் ஒரு பெண் எதிர்ப்பட்டுப் போய்க்கொண்டிருந்தாளாம். ரிஷிகளுக்குச் சிரேஷ்டராய், தவசிகளுக்குத் தலைவராய், முற்றும் துறந்த முனிபுங்கவராய் இருந்த பாரத்துவாசர் மனதில் காம எண்ணங்கள் அலைபோல எழுந்தனவாம். சென்ற மனதை அடக்க முனிவர் எவ்வளவோ, முயன்றார். முடியவில்லை. காமத்தின் வெப்பம் தாளாமல், ஆற்றில் இறங்கி, ஆற்று நீரை அணைத்துக்கொண்டாராம், அப்பொழுது காமம் வெளிப்பட்டு, குழந்தையுருவமாக ஆகியதாம். பின் இந்தக் குழந்தையே, தவம்செய்து செவ்வாய்கிரகமானான் என்று மச்சபுராணம் கூறுகிறது.

மற்றொரு கதையில், பிரமதேவனுக்கும் பூராடம் என்ற நட்சத்திரத்துக்கும் உண்டான மகன் செவ்வாய் என்று கூறப்படுகிறது. இந்தக் கதைப்படிப் பார்த்தால், பூராடம் சந்திரன் மனைவியர்களில் ஒருத்தி, சந்திரன் பிரமதேவனுக்குப் பேரன் முறை வேண்டும், எனவே பேரனுடைய மனைவியைக் கூடிய குற்றம் பிரமனுக்கு உண்டாகும்.

செவ்வாய் எப்பொழுதும் இளமையுடையவனென்றும், அவன் எட்டு குதிரைகள் பூட்டிய தேரில் வருகிறானென்றும் புராணம் கூறுகிறது.

புதன்

செவ்வாய் லோகத்துக்கு 2 கோடி மைல்களுக்கு மேல் புதன் இருக்கிறதாம்.

சந்திரனுக்கும், அவனுடைய குருவான பிரகஸ்பதியின் மனைவியான தாரைக்கும் உண்டான மகனே புதன். வெகுநாட்கள்வரை பிரகஸ்பதி புதனைத் தன்மகனென்றே நினைத்து வளர்த்துவந்தாராம். ஒருமுறை, சந்திரன் வந்து புதனைத் தன் மகனென்று கொண்டாட, பிரகஸ்பதி புதன் தன்னுடைய மகன்தான் என்று வாதாடினாராம். தன் மனைவியைத்தான் சந்திரன் உரிமை கொண்டாடிவிட்டானென்றால், தன்னுடைய மகனையுமா அவன் உரிமை

கொண்டாட வருவது என்ற எண்ணம் தேவ குருவுக்கு. புதன் யாருடைய மகன் என்பதில் சந்திரனுக்கும் அவனுடைய குருவுக்கும் பலத்த விவாதம் வந்துவிட்டது. பாவம்! வேத வேதாந்தங்களின் தத்துவங்களை விசாரணை செய்யவேண்டிய குருவும் சீடனும், புதனுக்குத் தந்தை யார் என்ற விசாரணையில் இறங்கிவிட்டனர். புதனோ இருவருக்கும் மத்தியில் நின்று கொண்டு, யார் தன்னுடைய தந்தை என்று அறியாமல் திகைத்தபடி இருந்தான். தந்தையர் இரண்டுபேருக்குத் தெரியாவிட்டாலும், தாய் ஒருத்திதானே, அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று தன் தாயைக் கூப்பிட்டு "மாதாவே! இந்த இருவரில் நான் யாருடைய மகன் என்பதைச் சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டாள். தாரை என்ன பதில் தருவாள்!-கட்டின கணவன் ஒருபுறம்! காதலைத் தட்டிய சந்திரன் மற்றொருபுறம்! எப்படிப்பட்ட கடைகெட்ட வாழ்வு நடத்தியவளாக இருந்தாலும், மகன் மாதாவைப் பார்த்து தந்தை யாரென்று கேட்டால் மனம் நோகத்தானே செய்யும், அதிலும் தந்தையர் பதவிக்குப் போட்டியிடும் இருவரும் முன் நின்றுகொண்டிருக்கும்பொழுது! தாரை ஏதும் பதில் சொல்லவில்லை, கணவனை நமஸ்கரித்து விட்டு, காதலனைக் கடைக்கண்ணுற் பார்த்து விட்டு, உள்ளே போய்விட்டாள்!

பெற்றெடுத்த தாயே சொல்லவில்லையென்றால், புதனுடைய தந்தை யார் என்பது பின் எப்படித் தெரியவரும்? நல்லவேளையாக தேவ குருவுக்கும், சந்திரனுக்கும் ஏற்பட்டுள்ள சச்சரவைக் கேள்விப்பட்டு, பிரமதேவனே அங்கு வந்து சேர்ந்தார். மூவரையும் தனித்தனியாகக் கூப்பிட்டு ரகசியமாகச் சொன்னாராம், புதன் சந்திரனுடைய புதல்வனென்று, சச்சரவு தீர்ந்தது, புதனை அழைத்துக்கொண்டு சந்திரன் சென்றுவிட்டான். பின் தவ மகிமையால் புதன் கிரகங்களில் ஒன்றாகி, செவ்வாய் லோகத்துக்குமேல், ஒரு உலகத்தை அடைந்தான்.

புதன் தவம் செய்யும்பொழுது இளை என்ற பெண்ணை வசப்படுத்திக்கொண்டான் என்று ஒரு கதை இருக்கிறது. இளை என்பவள் வைவச்சுதமநு என்ற அரசருடைய மகளாம். மகன் பிறக்கவேண்டுமென்று ஆவலுடன் இருந்த அரசருக்கு பெண்மகவு பிறந்தது என்றதும் மனவருத்தமடைந்தாராம். வசிட்டர் பெண்ணாயிருந்த இளையை ஆண் உருவமாக மாற்றிவிட்டாராம். அந்தக் குழந்தையும் இளவரசனாக வளர்ந்துவரும்பொழுது, ஒருநாள் வேட்டையாடிவரும்பொழுது, புதன் தவச்சாலையருகே வரும்பொழுது, ஆணாக அப்பொழுது காணப்பட்டபோதிலும் அந்த இளவரசன் பிறக்கும்பொழுது பெண்ணாக இருந்தான் என்பது புதன் எப்படியோ தெரிந்துகொண்டான். தவவேடத்திலிருந்த புதனுக்கு இளவரசன் மீது அடங்காத மோகம் வந்துவிட்டது. உடனே பக்கத்திலிருந்தவர்களை இகழ்ந்து சொல்லி அனுப்பிவிட்டு, தவச்சாலையினுள் இளவரசனை அழைத்துச்சென்று, பழையபடி அவனை பெண்கோலமாக்கி, புதன் மணந்துகொண்டானாம். இளவரசன் திரும்பி அரசுக்கு வந்ததும், கர்ப்பவதியாகி வயிறு விம்மத்தொடங்கியதாம். இந்த விபரீதத்தைக் கண்ட வசிட்டர், சிவபெருமானை வேண்டி, இளவரசன் ஒரு மாதம் ஆணுருவாகவும், ஒருமாதம் பெண்ணுருவாகவும் இருக்க வரம் பெற்றுத் தந்தாராம். ஆணும், பெண்ணுமாக இருக்க அருள்பெற்ற அந்த இளவரசன் புதனிடம் புருவாசு என்பவனைப் பெற்றெடுத்தான். இது பாகவத புராணத்தில் கூறப்படுகிற "பக்திமார்க்க" கதையாகும்.

புதன் எட்டுக் குதிரைகள் பூண்ட தேரில் உலவிவருபவன். அவன் இருக்கு வேதத்தின் ஐந்தாவது காண்டத்துக்கு அதிகாரியாகும்.

(தொடரும்)



யோக் (ப்ராக்) கவுன்

இந்த (ப்ராக்) கவுன் 2 வயதுமுதல், 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அணிவதாகும். இதை யோக் ப்ராக் என்றும் வழங்குவதுண்டு.

அளவுகள்

மார்புச் சுற்று அளவு	21	அங்.
பாதித் தோள்	4	,,
முழு நீளம்	22	,,
கை நீளம்	3½	,,
முன்னங்கை சுற்று அளவு	3	,,

1-ல் இருந்து 0 வரை 23 அங்.
(முழு நீளம் + 1 அங்.)

2-ல் இருந்து 0 வரை 5 அங்.
(¼ மார்பளவில் ¼ அங். குறைவு)

3-ல் இருந்து 0 வரை 2 அங்.
(1/12 மார்பளவு + ¼ அங்.)

4-ல் இருந்து 0 வரை 4¼ அங்.
(பாதித்தோள் + ¼ அங்)

5-ல் இருந்து 4 வரை ½ ,,

6-ல் இருந்து 4 வரை நேர்க்கோடு இணைக்க.

7-ல் இருந்து 2 வரை 12 அங்.
(¼ மார்பளவு + 1½ அங். + மடிப்புக்காக 5¼ அங். வைக்கவும்.)

8-ல் இருந்து 1 வரை 12 அங்.

9-ல் இருந்து 8 வரை 1½ ,,

10-ல் இருந்து 0 வரை 1 அங்.

11-ல் இருந்து 12 வரை 5 ,,
(¼ மார்பளவில் ¼ அங். குறைவு)

12-ல் இருந்து 7 வரை 12 அங்.
(2, 7 எண்ணுக்கும் உள்ள அளவு)

13-ல் இருந்து 11 வரை 23 அங்.
(முழுநீளம் + 1 அங்.)

H-ல் இருந்து 8 வரை 12 அங்.
(1, 8 எண்ணுக்கும் உள்ள அளவு)

14-ல் இருந்து 13 வரை ¾ அங்.
(முன்பக்கம் ¾ அங். நீளம் அதிகம்)

15-ல் இருந்து 8 வரை 1½ அங்.

16-ல் இருந்து 11 வரை 2 ,,
(3, 0-க்கும் உள்ள அளவு)

17-ல் இருந்து 11 வரை 4¼ அங்.
(பாதித்தோள் + ¼ அங்.)

18-ல் இருந்து 17 வரை ½ அங்.

19-ல் இருந்து 17 வரை நேர்க்கோடு இணைக்க.

20-ல் இருந்து 11 வரை 2½ அங்.

A-ல் இருந்து 7 வரை 2¾ அங்.

B-ல் இருந்து 7 வரை 2¾ அங்.

C ல் இருந்து 7 வரை 1 ,,
(A, C, B வரை படத்தில் உள்ளபடி வளைவாக இணைக்கவும்.

1, 10, 3, 5, A, C, 9, 1 எண்கள் பின்பக்கம் இணைப்பவைகள்.

14, 15, C, B, 18, 16, 20, 14 எண்கள் முன்பக்கத்தை இணைப்பவைகள்.

2, 10, 3, 5, 6 வரை பின்பக்கம் யோக்கும், 12, 20, 16, 18, 19 வரை முன்பக்கம் யோக்கும். (மேல்பக்கம் பாடி) தனியாக வெட்டி எடுத்துக் கொள்ளவும்.





2, A, C, 9, 1, 2 எண்கள் வரை பின்பக்கம் (ஸ்காட்) தனியாக வெட்டி எடுக்கவும்.

12, B, C, 15, 14, 12 எண்கள் வரை முன்பக்கம் (ஸ்காட்) கீழ்ப் பாவாடை தனியாக வெட்டி எடுக்கவும்.

(ஸ்காட்) கீழ்ப்பாவாடை 2, A, B, 12 எண்கள் வரை Λ இந்த குறி உள்ள இடத்தில் மடிப்புகள் அமைத்து, மேல் பாடியில் சேர்த்துத் தைக்கவும்.

Regd. No. M 6296 MANRAM

சிந்தை குளிரும் செய்தி!

செப்டம்பர் பவனி

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,